இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 58 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 20 – சனிக்கிழமை 07 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 58 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 20 - Saturday 07 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00

## செயிண்ட் கோபைன் தொழில் நிறுவன விரிவாக்கம்!

# தமிழ்நாட்டில் நல்லாட்சிக்கான அத்தாட்சி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Pierre–Andre de Chalendar), தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Benoit Bazin) உள்ளிட்ட செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக். 7-**

**தமிழ்நாட்டில் செயிண்ட் கோபைன் நிறுவனம் விரிவாக்கம் செய்து வருவதற்கு, இங்குள்ள நல்லாட்சி மற்றும் சிறப்பான முதலீட்டுச் சூழலே அத்தாட்சியாக கருதுகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், பிரான்ஸ் நாட்டின் செயிண்ட் கோபைன் (Saint Gobain) நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து ஆற்றிய உரை வருமாறு:-

I welcome all the Directors of Saint Gobain's Global Board to the beautiful city of Chennai.

தமிழ்நாட்டிற்கும் செயிண்ட் கோபைன் நிறுவனத்திற்குமான உறவு ஏறத்தாழ 25 ஆண்டு வரலாறு கொண்டது. 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம், திருப்பெரும்புதூரில் இந்நிறுவனத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டில், திருப்பெரும்புதூர், பெருந்துறை மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில், செயிண்ட் கோபைன் நிறுவனம் பல்வேறு தொழில் திட்டங்களை நிறுவி, இதுகாறும் ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்துள்ளது. தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தையும் சென்னையில் அமைத்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 9 அன்று, திருப்பெரும்புதூர் செயிண்ட் கோபைன் நிறுவனத்தில் மிதவைக் கண்ணாடிப் பிரிவு, ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு, நகர்ப்புற வனம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டேன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

> **சுமார் 3400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்று மேற்கொள்ளப்படும் இத்திட்டத்திற்கான அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும்.**

தற்போது செயிண்ட் கோபைன் நிறுவனம், ஒரகடத்தில் ஒரு புதிய உற்பத்தித் திட்டமும், திருப்பெரும்புதூர், பெருந்துறை மற்றும் திருவள்ளூர் திட்டங்களில் விரிவாக்கமும் மேற்கொள்ள உள்ளது. இம்மாநிலத்தில் நல்லாட்சி மற்றும் சிறப்பான முதலீட்டுச் சூழல் அமைந்திருப்பதற்கான அத்தாட்சியாகவே நான் கருதுகிறேன்.

சுமார் 3400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்று மேற்கொள்ளப்படும் இத்திட்டத்திற்கான அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற எனது மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் அனைவரையும் சென்னையில் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Mr. Pierre Andre de Chalendar), தலைமைச் செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Mr. Benoit Bazin) உள்ளிட்ட செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டைப் பின்பற்றி - தெலங்கானாவில் தொடங்கியது!

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்!

*ஐதராபாத், அக். 7-*

*தமிழ்நாடு அரசைப் பின்பற்றி தெலங்கானா மாநிலத்திலும், அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மதிய உணவு மட்டுமின்றி, காலையிலும் உணவு வழங்கி கல்வி கற்பிக்கும் விதமாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து அதனை செயல்படுத்தி வருகிறார். இத்திட்டம் நாடு முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இதையடுத்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை ஆய்வு செய்ய தெலங்கானா அரசு, அதிகாரிகள் அடங்கிய குழுவை அனுப்பி வைத்தது.*

*அந்த ஆய்வின் அடிப்படையில் தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தெலங்கானா மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்க உத்தரவிட்டார். இந்நிலையில் ரெங்கா ரெட்டி மாவட்டத்தில் முதலமைச்சர் சந்திர சேகர ராவ் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தை அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் பல்வேறு இடங்களில் தொடங்கி வைத்தனர். ரூ.400 கோடி செலவில் செயல்படுத்தும் இத்திட்டத்தால் 28,000 அரசு பள்ளிகளில் பயிலும் 23 லட்சம் மாணவர்கள் பயன் அடைய உள்ளனர்.*

*மாணவர்களுக்கு வழங்கப்படும் மெனுவையும் பள்ளிக் கல்வித் துறை தயாரித்துள்ளது. அதன்படி, திங்கள்கிழமை கோதுமை ரவா உப்புமா மற்றும் சட்னியும், செவ்வாய்க்கிழமை அரிசி ரவா கிச்சடியுடன் சட்னியும் வழங்கப்படவுள்ளது. புதனன்று பம்பாய் ரவா உப்புமா மற்றும் சட்னி, வியாழக்கிழமை ரவா பொங்கல் மற்றும் சாம்பார், வெள்ளிக்கிழமை தினை ரவா கிச்சடியுடன் சாம்பார், சனிக்கிழமை கோதுமை ரவா கிச்சடி மற்றும் சட்னி மாணவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள காலை உணவுத் திட்டம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.*

## நாயக்கனேரி ஊராட்சித் தலைவர் பதவி; வரலாறு தெரியாமல் உள்நோக்கத்துடன்

# ஆளுநர் ஆர்.என்.ரவி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் போல் பேசி வருகிறார்!

## நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, அக். 7-**

**சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவைக்கூடப் படிக்காமல், நாயக்கனேரி ஊராட்சி மன்றத்தின் பட்டியலினத் தலைவர் பதவியேற்பு பற்றி அமைதியைச் சீர்குலைக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் ஆளுநர் பொறுப்பில் உள்ள ஆர்.என்.ரவி பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். செய்தித் தொடர்பாளராகப் பரப்புரை செய்வதா?" எனக் கேட்டு நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அவரது அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டம், நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவியேற்பு குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவைக்கூட அறிந்துகொள்ள முயற்சிக்காமல் தமிழ்நாடு அரசின் மீது ஆளுநர் அவர்கள் திட்டமிட்டு அவதூறுப் பரப்புரையை செய்து வருவது மிகுந்த வேதனைக்குரியது. அரசியல்சட்டப் பதவியில் இருப்பவர் அரசியல் கட்சித் தலைவர் போல், குறிப்பாக பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் போல் பேசி, தமிழ்நாட்டின் சமூகநீதியால் பிறந்துள்ள அமைதிக்கும் குந்தகம் விளைவித்து வருவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,525 ஊராட்சிகளில் 4,357 இடங்கள் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதில் திருப்பத்தூர் மாவட்டம் நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி மட்டுமே நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் காரணமாக அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பேற்க இயலாத நிலை இருந்தது.

### நீதிமன்ற வழக்கால் பொறுப்பேற்க இயலவில்லை!

இந்த நாயக்கனேரி ஊராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் தனது 7.10.2021 நாளிட்ட உத்தரவில் "…. The learned Government Counsel submitted that the election is unopposed. Since this Court feels that the place is not meant to the person of this category, we make it clear that she shall not take charge…" (போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். ஒதுக்கப்பட்ட இடத்துக்குரிய பிரிவைச் சேர்ந்தவராக இந்நபர் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிற காரணத்தால் சம்பந்தப்பட்ட நபர் பொறுப்பேற்கக் கூடாது என்று தெளிவாக்குகிறோம்.) எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் ஊராட்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பை ஏற்க இயலாத நிலை ஏற்பட்டது.

திராவிட மாடல் அரசின் சமூகநீதிக் கொள்கை, பா.ஜ.க.வையும், அதன் அமைப்புகளையும் தமிழ் மண்ணுக்குள் செல்வாக்குப் பெற முடியாமல் தடுத்து வைத்திருக்கிறதே என்ற



ஆதங்கம்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இப்படி பேச காரணமே தவிர, பட்டியலினப் பழங்குடியின மக்கள் மீது அவருக்கு இருக்கும் அக்கறை இல்லை.

அப்படி அவருக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருந்தால் "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்" என்று சட்டம் பிறப்பித்துள்ளதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்றுள்ளவர்களைக் கடிந்து கொண்டிருக்கலாம். அடிக்கடி டெல்லி செல்லும் அவர், உத்தரபிரதேசத்தில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 31.8 விழுக்காடும், மத்திய பிரதேசத்தில் 63.6 விழுக்காடும் உயர்ந்திருப்பதற்குக் கவலைப்பட்டு குரல் கொடுத்திருக்கலாம். உத்தரபிரதேசத்தில் 13,146, மத்திய பிரதேசத்தில் 7214, குஜராத்தில் 1201 எனப் பட்டியலினத்தவர் கொலை செய்யப்பட்டது குறித்து வெகுண்டெழுந்திருக்கலாம். ஏன்; பழங்குடியினருக்கு எதிராக மத்திய பிரதேசத்தில் 17 விழுக்காடு அளவிற்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதைக் கண்டு பதற்றப்பட்டு பேசியிருக்கலாம்.

### யாரை ஏமாற்ற இந்த நாடகம்?

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அதிகரித்து வரும் இத்தகைய கொடுமைகளை எதிர்த்து உள்துறை அமைச்சரிடம் குரல் கொடுக்காத ஆளுநர், உயர்நீதிமன்ற உத்தரவில் உள்ள ஒரு ஊராட்சியை மட்டும் பற்றிப் பேசுவதன் உள்நோக்கம் என்ன? யாரை ஏமாற்ற இந்த நாடகமாடுகிறீர்கள்?

அனைவரும் ஓரிடத்தில் சமத்துவமாய் வாழ சமத்துவபுரங்களை உருவாக்கிய தமிழ்நாடு, சமூகநீதி மண். இங்கு தமிழ்நாடு பட்டியலின பழங்குடியின ஆணையத்தை அமைத்து, மாநில அளவிலான கண்காணிப்புக் கூட்டங்களை நடத்தி பட்டியலின மற்றும் பழங்குடியினத்தவருக்கான சமூகநீதியை நிலைநாட்டி வருகிறார் எங்கள் முதலமைச்சர் அவர்கள்.

### பதிலடி தர மக்கள் தயார்!

எங்கள் முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த போதுதான் தேர்தலை நடத்த முடியாத ஊராட்சிகளில் தேர்தலை நடத்தி, சமூகநீதியை நிலைநாட்டினார். பட்டியலினப் பழங்குடியினத்தவர் மீதான வன்முறைகளுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் தண்டனை பெறுவது 2013 -2020 வரை 7.15 விழுக்காடாக இருந்த நிலை 2021-2023இல் 9.12 விழுக்காடாக உயர்த்தியுள்ளது இந்த சமூகநீதி அரசுதான்!

இந்த விவரங்களும் வரலாறும் தெரியாமல், ஆளுநர் அவர்கள் சிறப்பாகச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி வரும் திராவிட மாடல் அரசை தொடர்ந்து விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. அரசியல் பேச வேண்டும் என்றால் "அரசியல் தலைவராக" தன்னை மாற்றிக் கொண்டு தாராளமாக ஆளுநர் அவர்கள் தன் கருத்தை தெரிவிக்கட்டும். அதற்கு பதிலடி கொடுக்க நாங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களுமே தயாராக இருக்கிறார்கள்.

எனவே, ஆளுநர் அவர்கள் உண்மைக்கு மாறான இத்தகைய பேச்சுகளைத் தவிர்த்து, மாநில சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கும், அரசு நிர்வாகத்தின் கோப்புகளிலும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களைக் காப்பாற்ற அவர்கள் தொடர்பான லஞ்ச வழக்குகளில் கையொப்பமிடாமல் வைத்துள்ள (sanction of prosecution) கோப்புகளிலும் கையெழுத்துப் போடுவதில் தனது நேரத்தை உருப்படியாகச் செலவிட்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆக்கபூர்வமாக செயல்படும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 07-10-2023

# ஊடகங்களுக்கு விடப்பட்டுள்ள மிரட்டல்

சி.பி.ஐ. - வருமானவரித் துறை - அமலாக்கத் துறை ஆகியவற்றை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசு - அடுத்து ஊடகங்களையும் மிரட்டி வருகிறது. 'நியூஸ் கிளிக்' முதன்மை ஆசிரியர் பிரபீர் புர்காயஸ்தாவும், அதன் மனிதவளப் பிரிவின் தலைவர் அமித் சக்ரவர்த்தியும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த கைது நடவடிக்கை என்பது ஒட்டுமொத்தமாக ஊடகங்களுக்கு விடப்பட்டுள்ள மிரட்டல் ஆகும்.

பிரபீர் புர்காயஸ்தா - அவசர நிலைக்காலத்தில் ( 1975) 18 மாதங்கள் சிறையில் இருந்த போராளி ஆவார். இடதுசாரிச் சிந்தனை கொண்டவர். அமித் சக்ரவர்த்தி - ஒரு மாற்றுத்திறனாளி. இவர்கள் இருவரும்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள். டெல்லியில் உள்ள நியூஸ் கிளிக் இணையதள செய்தி நிறுவன அலுவலகத்தில் தீவிர சோதனை நடத்தி பூட்டி சீல் வைத்த டெல்லி காவல்துறையினர், இந்த கைது நடவடிக்கையையும் தொடர்ந்துள்ளனர்.

என்ன குற்றச்சாட்டு அடிப்படையில் இந்த நடவடிக்கையைச் செய்துள்ளார்கள் தெரியுமா? அமெரிக்க நாளிதழான 'நியூயார்க் டைம்ஸ்' ஒரு செய்தியை வெளியிடுகிறது. அதில், 'நியூஸ் கிளிக் நிறுவனம், சீனாவிடமிருந்து நிதி பெறுகிறது' என்று குற்றச்சாட்டு சொல்லி இருந்தார்களாம். இதை வைத்து இந்த கைது நடவடிக்கையாம்!

நியூஸ் கிளிக் ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்களது இணையதளம் சுதந்திரமானது. சீன நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்றுக்கொண்டு செய்திகளை வெளியிட்டதாகக் கூறப்படும் புகார்களுக்கு எந்த அடிப்படையும் இல்லை. சீனாவுக்காக பிரச்சாரம் செய்யும் எந்த செய்தியும் எங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட வில்லை. 2021ஆம் ஆண்டு முதல் நியூஸ் க்ளிக் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள், வரவு - செலவுகள், வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்து ஒன்றிய அரசின் பல்வேறு விசாரணை அமைப்புகள் ஆய்வு நடத்தி உள்ளன. இந்த ஆய்வுகளில் எந்த முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் உள்நோக்கத்துடன் வெளியான கட்டுரையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, எந்த ஆதாரமும் இல்லாமல் 'உபா' போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் எப்படி வழக்குப் பதிவு செய்ய முடியும்?" என நியூஸ் கிளிக் கேள்வி எழுப்பியுள்ளது.

**"சீன நிறுவனங்களிடம் இருந்து பெருமளவில் நிதி பெற்ற 'பி.எம்.கேர்ஸ்' ஐ நிர்வகிப்பவர் மீது ஏன் ஒரு நடவடிக்கையும் இல்லை?" என உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் கேள்வி எழுப்பியுள்ளார். "சீனாக்காரர் ஒருவரிடமிருந்து கொஞ்சம் நிதி வந்த ஒரே காரணத்துக்காக, நியூஸ் க்ளிக் மீது தேசத் துரோக வழக்கு. அந்த நிறுவனத்தோடு தொடர்பு கொண்டவர்களின் வீடுகளில் ரெய்டு, அவர்களின் செல்பேசிகளும் லேப்டாப்களும் பறிமுதல். ஆனால் சீன நிறுவனங்களிடமிருந்து பெருமளவில் நிதி பெற்ற PM CARES-ஐ நிர்வகிப்பவர் மீது ஏன் ஒரு நடவடிக்கையும் இல்லை?" என கேள்வி எழுப்பியுள்ளார்.**

2021 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. இதன் முதன்மை ஆசிரியர் பிரபீருக்குச் சொந்தமான வீட்டை முடக்கியது. அவரது நிரந்தர வைப்புத் தொகையை முடக்கியது. பெரிதாக ஆதாரம் இல்லாததால், நியூஸ் கிளிக் மற்றும் அதன் உரிமையாளர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் தொடர்ச்சியாக இந்த இணைய ஊடகத்தைக் குற்றம் சாட்டி ஒன்றிய அமைச்சரே நாடாளு மன்றத்தில் பேசினார். இதைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் 3 அன்று சோதனை நடத்தி கைதும் செய்து விட்டார்கள். 'நியூஸ் கிளிக்' ஊடக ஊழியர்கள் அனைவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். மூத்த பத்திரிகையாளர் ஊர்மிளேஷ், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். ராஜ்யசபா டிவியின் முன்னாள் ஆசிரியர் இவர்.

'நியூஸ் கிளிக்' என்பது இடதுசாரிச் சிந்தனை கொண்ட ஊடகம் ஆகும். பா.ஜ.க. அரசின் போலியான முகத்தை தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்துள்ளது. இதுவரை ஆங்கிலத்தில் செய்திகளை வெளியிட்டு வந்தவர்கள், சமீப காலமாக இந்தியில் செய்திகளை வெளியிடத் தொடங்கி உள்ளார்கள். 'இந்தி' பேசும் மாநிலங்கள் விழிப்புணர்வு பெற்றுவிடக் கூடாது என்பதில் பா.ஜ.க. எப்போதும் தெளிவாக இருக்கும். அந்த மாநில மக்களை இருட்டில் வைத்து, வாக்கு வேட்டையாடும் கட்சி அது. எனவே, 'இந்தி'யில் செய்தி வெளியிடுவதைத் தடுக்க நினைத்துள்ளார்கள்.

**'இந்தியா' கூட்டணி சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில், "மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, கடந்த ஒன்பது ஆண்டுகளில், பிபிசி, நியூஸ் லாண்ட்ரி, டைனிக் பாஸ்கர், பாரத் சமாச்சார், காஷ்மீர் வாலா, தி வயர் போன்ற ஊடகங்களை ஒடுக்க புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்தியது. தற்போது நியூஸ் கிளிக் செய்தி நிறுவனத்தை ஒன்றிய அரசு குறிவைத்துள்ளது. மோடி அரசு ஊடக நிறுவனங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் தங்கள் கட்சியின் கருத்தியலுக்கு ஊடகங்களை ஊதுகுழலாக மாற்ற முயற்சிக்கிறது." என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி உள்ளார்கள்.**

'அழுத்தத்துடன் பணிபுரிகிறோம்' - என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு, டிஜிபப் நியூஸ் இந்தியா ஃபவுண்டேஷன் (Digipub News India Foundation), இந்தியன் வுமன்ஸ் பிரஸ் கார்ப்ஸ் (Indian Women's Press Corps), பிரஸ் கிளப் ஆஃப் இந்தியா (Press Club of India) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இணைந்து கடிதத்தை எழுதியுள்ளன. "சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய, பத்திரிகைப் பணி ஒன்றும் தீவிரவாதப் பணி அல்ல. எனவே, பத்திரிகைத்துறைக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களை உச்சநீதிமன்றம் தலையிட்டு தடுக்க வேண்டும்" என அவை வலியுறுத்தி உள்ளன.

"மக்களுக்கு நன்மைகள் எதுவும் செய்ய மாட்டோம், இதை யாராவது குறை சொன்னால் அவர்களை விடவும் மாட்டோம்" - இதுதான் பா.ஜ.க. பாணி ஆட்சி முறையாகும். இவை அனைத்துக்குமான தண்டனையை மக்கள் நிச்சயம் தருவார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) சென்னையில், செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் பியரி ஆன்ட்ரி டி சேலண்டர் (Mr. PierreAndre de Chalendar), தலைமை செயல் அலுவலர் பெனாய்ட் பாசின் (Mr. Benoit Bazin) உள்ளிட்ட டி செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினரை சந்தித்து கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் உலகளாவிய நிர்வாக இயக்குநர்கள் குழுவினர் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு நேற்று (06.10.2023) வருகை தந்ததை முன்னிட்டு, விமான நிலையத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பொன்னாடை மற்றும் புத்தகம் வழங்கி வரவேற்றனர்.

### அண்ணா பேருந்து நிலையம் - 'ஸ்டெம் பார்க்' உள்ளிட்ட முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா! கோவில்பட்டியில்

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

### அமைச்சர் கே.என். நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.ஜீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, அக். 7-

அக்டோபர் - 8 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள அண்ணா பேருந்து நிலையம், ஸ்டெம் பார்க் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா மற்றும் கோவில்பட்டியில் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் கே.என்.நேரு, கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் பங்கேற்கின்றனர் என வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடியில் இயங்கி வந்த அண்ணா பழைய பேருந்து நிலையமானது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.57 கோடியிலும் அம்பேத்கார் நகரில் ரூ. 29 கோடியில் ஸ்டெம் பார்க்கும் (STEM PARK) புதிதாக கட்டப்பட்டுள்ளதை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்திடவும், ரூ.87 கோடி மதிப்பில் பல்வேறு கழிவுநீர் கால்வாய் பணிகள் துவக்கி வைக்கப்படவும் உள்ளது. அதுபோல மீன்வளத்துறை சார்பில் ரூ.9 கோடி மதிப்பில் மீன் ஏலக்கூடமும், பொதுப்பணித்துறை சார்பில் கழுகுமலை எட்டையபுரத்தில் ரூ.5.63 கோடி மதிப்பில் சார் பதிவாளர் கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. மேலும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியி



லிருந்து ரூ.2.75 கோடி மதிப்பில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, சமுதாயநலக் கூடம் ஆகிய பணிகள் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

அக்டோபர் - 8 - ல் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி அண்ணா பழைய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தி.மு.கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வள்ர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார்கள்.

அன்றைய தினம் மதியம் 1.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவில்பட்டி சத்தியபாமா திருமண மண்டபத்தில் கோவில்பட்டி சட்ட மன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஏழைய - எளிய பெண்கள் 125 பேருக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எனவே அனைத்து நிகழ்ச்சிகளிலும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு

## நெல்லையில் 2வது மண்டல பேச்சுப் போட்டி!

### என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு! இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை.அக்.7-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறை சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 2 வது மண்டல பேச்சுப்போட்டி தி.மு.க. சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் இன்றும் நாளையும் நெல்லையில் நடைபெறுகிறது என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. சட்டத் துறையின் சார்பில் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளது. இன்று (07.10.2023) காலை 9 மணிக்கு சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியிலும் நாளை (08.10.2023) காலை 9 மணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கு பாளையங்கோட்டை ரகுமத் நகர் எல்.எஸ்.மகாலில் பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளது.

போட்டிகளுக்கான தலைப்புகள் வருமாறு.

கலைஞரின் பார்வையில் சமூக நீதி.

கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி.



கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்.

கலைஞரின் பார்வையில் தொழில் வளம்.

கலைஞரின் பார்வையில் கல்வி.

மேற்சொன்ன இந்த 5 தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள்.

அந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் 5 நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும்.

திருநெல்வேலி மண்டல பகுதிகளில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் பட்டியலினை தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு பேச்சுப்போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஜெ.பச்சையப்பன் கே.சந்துரு தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே.சரவணன் ஆகியோரிடம் ஒப்படைக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதிக் கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படுகிறது.

முதல் பரிசு ரூபாய் 50,000, தங்கப்பதக்கம் சான்றிதழ்.

2வது பரிசு துபாய் 25000, வெள்ளி பதக்கம் சான்றிதழ்.

3வது பரிசு ரூபாய் 15,000, தாமிர பதக்கம் சான்றிதழ்.

2 ஆறுதல் பரிசு ரூபாய் 5000,ம் வெண்கலபதக்கம் சான்றிதழ்.

இந்த பேச்சுப்போட்டி நிகழ்ச்சியில் நெல்லை மாவட்டத்தில் உள்ள சட்டக் கல்லூரி மாணவ,மாணவியர்களும் மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சியில் ரூ.45.65 இலட்சம் மதிப்பிட்டில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா புதிய பூங்காவை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர், நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா இலட்சுமணன், வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மண்டல இணைப் பதிவாளர் யசோதா தேவி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், ஒன்றியக் குழுத் தலைவர் சங்கீதா அரசி ரவிதுரை, நகரச் செயலாளர் நயினா முகமது, பேரூராட்சி துணைத் தலைவர் ச.பாலாஜி, பேரூராட்சி செயல் அலுவலர் ஷேக் லத்தீப், ஒன்றியச் செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், க.மும்மூர்த்தி, ஆர்.பி.முருகன், மாவட்ட விவசாய அணி தலைவர் பாபுஜீவானந்தம், மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் சர்கார் பாபு, ரேவதி வீராசாமி, கனக சக்திவேல், சுதா பாக்கியராஜ், வெண்ணிலா காத்தவராயன், வீரவேல், பிரியா பூபாலன், சுரேஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொறுப்புள்ளவராகக் கருதப்படும் பிரதமர்

# அவதூறான செய்திகளைப் பரப்புவதா?

## "வள்ளலார் -200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், "வள்ளலாரின் இறை அனுபவங்கள்" என்ற நூலினை வெளியிட்டார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார். சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர். வேளாக்குறிச்சி ஆதீனம்சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக்.7–**

**"பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் தவறான அவதூறுச் செய்தியைச் சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து இன்னொரு மாநிலத்தில் போய் பேசுவது முறையா? தர்மமா?" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'வள்ளலார் – 200' ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் உரையாற்றும்போது கேள்வி எழுப்பினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு: –**

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்தல் வேண்டும்" என்பதை அறநெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய, அருட்திரு வள்ளலார் அவர்களின் 200 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், "தனிப்பெரும் கருணை நாளில்" இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுவாக நூற்றாண்டு விழா என்றாலோ, பிறந்தநாள் விழாக்கள் என்றாலோ, அந்த குறிப்பிட்ட நாளில் மட்டுமே கொண்டாடுவார்கள். ஆனால் 'செயல்பாபு' என்று என்னால் அன்போடு அழைக்கப்படக் கூடிய அமைச்சர் சேகர்பாபு அவர்களோ, மாதம் முழுவதும் – ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழாவை நாள்தோறும் நடத்திக் கொண்டு இருக்கிறார். மாதந்தோறும் விழாக்கள் நடத்தினால் தான் அவருக்கு திருப்தி!

ஏதோ கணக்குக்காக – கடமைக்காக அல்ல; எதையும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் நடத்துவார். அவரிடம் எந்தப் பணியை ஒப்படைத்தாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் – மற்றவர்களை விட வித்தியாசம் தெரிவது போல நடத்திக் காட்டுவார் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா!

**கடந்த ஆண்டு அக்.5ல்**
**முப்பெரும் விழா கொண்டாடினோம்!**

தந்தை பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாளாகவும், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மாடல் அரசு, அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்தநாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்தது. வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள், அவர் தொடங்கிய தரும சாலைக்கு 156 ஆண்டுகள், அவர் ஏற்றிய தீபத்துக்கு 152 ஆண்டுகள் – ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக, கடந்த ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் கொண்டாடினோம்.

அந்த விழாவில் கலந்து கொண்டு, 'வள்ளலார் – 200' விழாவுக்கான இலச்சினையை வெளியிட்டோம். அஞ்சல் உறை மற்றும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. ஆண்டுதோறும், அன்னதானம் வழங்குவதற்கான நிகழ்ச்சியையும் நான் அன்றைக்கு தொடங்கி வைத்தேன். அதற்காக 3 கோடியே 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது. அது ஒரு நாள் விழாவாக மட்டும் நடத்தி முடித்து விடவில்லை. ஆண்டு முழுவதும் நடைபெறும் என்று அமைச்சர் சேகர்பாபு அறிவித்தார். ஆண்டு முழுவதும் எப்படி நடத்துவார்கள் என்பதை அறிய நானும் ஆர்வமாக இருந்தேன். அந்தப் பட்டியலை வாங்கிப் பார்த்த பிறகுதான் எனக்கே மலைப்பாக இருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான 52 வாரங்களும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர்களது ஆலோசனைப்படி 52 வாரங்களும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருக்கிறது.

சென்னையில், நான் கலந்து கொண்டது முதல் நிகழ்ச்சி. இதன் தொடர்ச்சியாக 50 வாரங்களாக 50 நகரங்களில் வள்ளலார் முப்பெரும் விழா நடைபெற்றுள்ளது. இப்போது இங்கு நான் கலந்து கொள்ளும் இந்த நிறைவு விழா, 52ஆவது நிகழ்ச்சி!

**நிறைவு விழா மட்டுமல்ல;**
**நிறைவான விழா!**

என்னைப் பொறுத்தவரையில் இது நிறைவு விழா மட்டுமல்ல; நிறைவான விழா! வள்ளல் பெருமானாருக்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை – மரியாதையை நிறைவாக ஆற்றி இருக்கிறோம். தொடர் அன்னதானங்கள் 21 மண்டலங்களில் நடைபெற்றுள்ளன.

பசிப்பிணி போக்க அணையா அடுப்பை உருவாக்கிய அண்ணல் பெயரால் அரசின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு வள்ளலார் வாழ்க்கை தொடர்பாக கட்டுரை, பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

அறிவுப் பசியையும் – வயிற்றுப் பசியையும் போக்கும் விழாக்களாக இவை அமைந்துள்ளன. இதனை ஆர்வத்துடன் செய்து காட்டியுள்ள அமைச்சர் சேகர்பாபு அவர்களையும், இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் மணிவாசன் அவர்களையும், சிறப்புப் பணி அலுவலர் குமரகுருபரன் அவர்களையும், ஆணையர் முரளீதரன் அவர்களையும், கூடுதல் ஆணையர் சங்கர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களையும் நான் பாராட்டுகிறேன். உங்கள் அனைவரின் சார்பில் அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'கண்மூடி வழக்கமெல்லாம்**
**மண்மூடிப் போக' எனப் பாடியவர்!**

இன்று இந்தக் காலக்கட்டத்துக்குத் தேவையான மிகமுக்கியமான வழிகாட்டி தான் அருட்திரு வள்ளலார் அவர்கள். இறையியல் என்பது அவரவர் விருப்பம்! அவரவர் தனிப்பட்ட உரிமை! ஆனால் அந்த இறையியலை – ஆன்மீக உணர்வை ஒரு கூட்டம் அரசியலுக்கு பயன்படுத்தி, அதன் மூலமாக குளிர் காயப் பார்க்கிறது.

அரசியல் வேறு – ஆன்மீகம் வேறு என்பதை பகுத்தறிந்து பார்க்கும் பகுத்தறிவாளர்கள்தான் தமிழ்நாட்டு மக்கள். அந்த மக்களைக் குழப்ப சிலர் முயற்சித்து வரும் காலத்தில், வள்ளலார் அவர்கள் நமக்கு அறிவுத் திறவு கோலாகக் காட்சி அளிக்கிறார்கள்.

சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளலார் அவர்கள், கண்மூடி வழக்கம் எல்லாம் மண் மூடிப் போக எனப் பாடியவர் அவர்.

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே" – என்று பாடியவர் வள்ளலார் பெருமான் அவர்கள்.

அனைத்துயிரும் ஒன்று என்ற வள்ளல் பெருமானாரின் எண்ணத்தை இன்று நாம் விதைக்க வேண்டும். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419ஆவது வாக்குறுதியாக 'வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்' அமைக்கப்படும் என்று சொல்லி இருந்தோம்.

''சாதி சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றும் வகையில், இது அமையும்'' என்று சொல்லப்பட்டது. அந்த மையத்தின் ஆணையினை இன்று உங்கள் முன்னால் வழங்கியிருக்கிறோம். விரைவாக அந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு மிகச் சிறப்பாக அது கட்டி முடிக்கப்படும்.

சென்னையில் முதன்முதலாக வள்ளலார் நகரை உருவாக்கியவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். நாம் ஆட்சிக்கு வந்ததும் வள்ளலார் பிறந்த நாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகிறோம்.

**வள்ளலாரை உயர்த்துவது**
**சிலருக்குப் பிடிக்கவில்லை!**

வள்ளலாரின் அறிவு ஒளியில் இதுபோன்ற பிளவுசக்திகள் மங்கிப் போவார்கள். நாம் வள்ளலாரை உயர்த்திப் பிடிப்பது, சிலருக்கு பிடிக்கவில்லை. பெரியாரையும் போற்றுகிறோம், வள்ளலாரையும் கொண்டாடுகிறார்களே! என்பதுதான் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. திராவிட மாடல் அரசு என்று சொல்லிக் கொள்கிறார்கள். கோவில்கள் அனைத்தையும் பொன்போல போற்றிப் பாதுகாக்கிறார்களே – இவர்களை என்ன சொல்லி குற்றம் சாட்டுவது என்று சிலருக்கு குழப்பமாக இருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு, தெலங்கானா மாநிலத்தில் தேர்தல் பரப்புரை செய்ய வருகை வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் – தமிழ்நாட்டுக் கோவில்களைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள். அவர் மத்தியப் பிரதேசத்திற்கு சென்று பேசினாலும் – அந்தமானில் பேசினாலும் – தெலங்கானாவில் பேசினாலும் – தமிழ்நாட்டைப் பற்றித் தான் பேசுகிறார். அவரால் மறக்க முடியாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

**பிரதமர் குற்றச்சாட்டுக்கு**
**திட்டவட்டமாக மறுப்பு - கண்டனம்!**

"தமிழ்நாட்டில் உள்ள இந்து கோவில்களை, திமுக அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோவில் சொத்துகள் மற்றும் வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது" என்று பகிரங்கமாக அவர் பேசி இருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

பிரதமர் அவர்களுக்கு நான் எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இதனை ஒரு தமிழ் நாளிதழ் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. அந்த நாளிதழின் நிர்வாகி ஒருவர், புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் அறங்காவலர்களில் ஒருவராக இருக்கிறார். அப்படியானால் அவர், அந்த கோவிலை ஆக்கிரமித்துள்ளார் என்று அர்த்தமா? அதே நாளிதழில் கடந்த ஜூன் மாதத்தில் அறநிலையத் துறையின் சிறப்பான செயல்பாடு பற்றி ஒரு கட்டுரையும் வந்திருக்கிறது.

**நாளிதழ் வெளியீட்டாளரின்**
**நற்சான்றுப் பத்திரம்!**

அந்த கட்டுரையை நான் படிக்கிறேன். அந்தக் கட்டுரைக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய தலைப்பு: "கோவில் உண்டியல் பணம் எங்கும் போகாது''! யூகப் பேச்சுக்களும், உண்மை நிலையும் அதில் அடங்கும். கோவில்களில் உண்டியல் வைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பக்தர்களின் காணிக்கைகள் பத்திரமாகத்தான் இருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனே கையாளப்படுகின்றன. காணிக்கை குறித்த பதிவேடுகள் எண்ணி முடிக்கப்பட்ட மறுநாளே அறநிலையத் துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு – அங்குள்ள பதிவேடுகளில் ஏற்றப்படு கின்றன. அதிலிருந்து ஒரு நகல் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப்படுகிறது. தனியார் நிறுவனங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன" இப்படிச் சொல்வது இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

இன்னொன்றையும் சொல்கிறார் அவர்... எந்த நாளிதழ் என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. உங்களுக்கே புரியும். அதில் என்ன சொல்கிறார் என்றால், "ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்கு பத்து சதவிகிதம் போகிறது – அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது – அவர்களின் அறியாமையன்றி வேறில்லை" என்று சொல்வதும் இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

அதே நாளேட்டில்தான் பிரதமர் சொன்ன பொய்யை தலைப்புச் செய்தியாக போட்டிருக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் – தவறான அவதூறு செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து – இன்னொரு மாநிலத்தில் போய் – பேசுவது முறையா? தர்மமா? தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல் கோவில்களை அரசு ஆக்கிரமித்தது போலவும் – வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவது போலவும் பொய்யான செய்தியை இந்திய நாட்டின் பிரதமர் கட்டமைக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் யாருக்காக பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 3,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இது தவறா? சொல்லுங்கள் இது தவறா? 1000 கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா?

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவறா?

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி களையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது தவறா?

எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் அவர்களின் பார்வையில்தான் தவறு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையும் – 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற பொதுத் தன்மையுடனான ஆட்சியை நடத்தி வருகிறோம். கருணையுள்ள ஆட்சியை நடத்தி வருகிறோம். அதனால்தான் கருணை வடிவிலான வள்ளலாரைப் போற்றுகிறோம்.

அதற்கு அடையாளமாக வள்ளலார் – 200 நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

**வாடிய உயிர்களை**
**வாழ வைக்கும் ஆட்சி!**

**கடலூர் மாவட்டத் தலைநகரில் 17 ஏக்கரில் அமைக்கப்பட இருக்கின்ற புதிய பேருந்து நிலையத்திற்கு "அருட்பிரகாச வள்ளலார்" அவர்களின் பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில், வாடிய உயிர்கள் அனைத்தையும் வாழ வைக்கும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றைக்கும் செயல்படும்! இது உறுதி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## பிரதமர் பேசுவது முறையா? தர்மமா?

பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் – தவறான அவதூறு செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து – இன்னொரு மாநிலத்தில் போய் – பேசுவது முறையா? தர்மமா? திமுக ஆட்சிக்கு வந்தது முதல் கோவில்களை அரசு ஆக்கிரமித்தது போலவும் – வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவது போலவும் பொய்யான செய்தியை இந்திய நாட்டின் பிரதமர் கட்டமைக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் யாருக்காக பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 3,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இது தவறா? சொல்லுங்கள் இது தவறா? 1000 கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா?

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர்செய்வதற்கும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவறா?

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1250 திருக்கோயில்கள் மற்றும் 1250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி களையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது தவறா?

எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் அவர்களின் பார்வையில்தான் தவறு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையும் – 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற பொதுத் தன்மையுடனான ஆட்சியை நடத்தி வருகிறோம். கருணையுள்ள ஆட்சியை நடத்தி வருகிறோம். அதனால்தான் கருணை வடிவிலான வள்ளலாரைப் போற்றுகிறோம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார்–200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில். கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன். திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள். மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன். இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளிதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் – 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்தார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார். சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம்சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளிதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘வள்ளலார் 200’ ஓராண்டு தொடர் அறநிகழ்வு நிறைவு விழாவில்

# வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணை! முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## புகைப்படக் கண்காட்சி – அன்னதானம் தொடங்கி வைப்பு!

*சென்னை, அக். 7 -*

“வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வழங்கி, சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு சிறப்பு செய்து, புகைப்பட கண்காட்சி மற்றும் அன்னதானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணை யினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார்.

மேலும், “வள்ளலாரின் இறை அனுபவங்கள்” என்ற நூலினை வெளியிட்டு. 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை திறந்து வைத்து, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தார்.

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் “தனிப்பெருங் கருணை நாள்” என கடைபிடிக்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 5 ஆம் நாள் ”தனிப்பெருங்கருணை நாளாக” கொண்டாடப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், “உயிர்த்திரள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156-வது ஆண்டு தொடக்கமும் (25.5.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200-வது ஆண்டு தொடக்கமும் (5.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152-வது ஆண்டும் (5.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200-வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவருட் பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினை சிறப்புற நடத்திடும் வகையில் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டு வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை, 52 வாரங்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்திட செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

முதல் நிகழ்ச்சியாக, முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று 5.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், வள்ளலார் முப்பெரும் விழாவினை தொடங்கி வைக்கும் வகையில், “வள்ளலார் - 200” இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் 25.04.2023 அன்று திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத்தினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.3.25 கோடி காசோலையை சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சி களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தது டன், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தனர்.

“வள்ளலார் - 200” ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவான நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார். மேலும், “வள்ளலாரின் இறை அனுபவங்கள்” என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர், உறுப்பினர்கள் முதுமுனைவர் சத்தியவேல் முருகனார், கே.என். உமாபதி, சிவ மெய்யப்பன், முனைவர் உலகநாயகி,.மெய். அருள்நந்தி சிவம்,. கே.உமாபதி,. என். இளங்கோ, எம்.கலைச்செல்வன்,. ஜி.சந்திரகாசு ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுரு பர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டி ணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர்.க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி மா. கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலநாராயணன்

### அக்டோபர் 7 (1996)



எல்லோராலும் ‘நீலம்’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் ‘பெரியார் விருது’ பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.10.2023) ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17–வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணியைச் சார்ந்த வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உடல் உறுப்புதானம் செய்தோரின் இறுதிச் சடங்குகளுக்கு அரசு மரியாதை!

# போற்றப்பட வேண்டிய தியாகச் செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரம்!

*சென்னை, அக்.7-*

இறக்கும் முன் உறுப்புதானம் செய்தோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் நடக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். இது போற்றப்பட வேண்டிய அந்த தியாகச் செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரம் என ‘தினத்தந்தி’ நாளேடு 6.10.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

### ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!




தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்று பன்னெடுங்காலமாக கூறிவந்தார்கள். அவ்வாறு தானம் செய்வது சிறந்த புண்ணியமாக கருதப்பட்டது. ஆனால், மருத்துவத் துறை வளர்ச்சி அடைந்த பிறகு, எல்லா தானங்களிலும் சிறந்த தானம் உடல் உறுப்பு தானம்தான் என்று கூறப்படுகிறது.

இப்போது, இதயம், நுரையீரல், சிறுநீரகம், ஈரல், கணையம், கண்விழிபடலம், எலும்பு, தோல் என்று முக்கியமான உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டாலும், தானம் வழங்கியவர்களின் உடல்களுக்கு இறுதி சடங்குகளை செய்ய எந்தத் தடையும் இருக்காது. அவர்களுடைய தானம் செய்யப்படும் உறுப்புகள் பல உயிர்களை வாழவைக்கும். இந்த உடல் உறுப்பு தானம் என்ற புனிதமான சேவை 2008-ம் ஆண்டு செப்.23-ந்தேதிதான் தமிழ்நாட்டில் வெளியே தெரியத்தொடங்கியது. டாக்டர் தம்பதிகளானஅசோகன் புஷ்பாஞ்சலி ஆகியோரின் 15 வயது மகன் ஹிதேந்திரன், இரு சக்கர வாகன விபத்தில் சிக்கி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, மூளைச் சாவு அடைந்த நிலையில், துக்கத்திலும் மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்து பலரின் மறுவாழ்வுக்கு வழி வகுத்து கொடுத்தனர். ஹிதேந்திரன் இறவா புகழோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தனது மகனின் இழப்பினால் துயருற்று இருந்த நேரத்திலும் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்த அந்த தியாக பெற்றோரை அப்போது முதல்-அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் நேரில் அழைத்து நெஞ்சுருக பாராட்டினார்.

தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்ற அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் ஆகஸ்டு 3ந்தேதி உறுப்பு தான தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் ஹிதேந்திரன் நினைவாக, அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்ட செப். 23ந்தேதி தான் உறுப்பு மாற்று தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்று தொடங்கி இன்றுவரை பல நல்ல உள்ளங்கள், எதிர்பாராத விதமாக தங்கள் குடும்ப உறுப்பினர்கள் விபத்தில் சிக்கி மூளை சாவு அடைந்த நேரத்தில், மிகுந்த மனிதாபிமானத்தோடு, இரக்கத்தோடு இன்னொரு உயிர் மறுவாழ்வு பெறட்டும் என்ற உணர்வில் இதயம், நுரையீரல், சிறுநீரகம், ஈரல், கணையம், கண்விழி படலம், எலும்பு, தோல் போன்றவற்றை வழங்கிய தன் மூலம் 1,730 பேரிடம் இருந்து உறுப்பு கொடை பெறப்பட்டு, மாற்று உறுப்புக்காக காத்திருந்த 6,327 பேருக்கு மேல் பொருத்தப்பட்டு, அவர்கள் மறுபிறவி பெற்றுள்ளனர்.

உறுப்பு தானம் வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமது உறுப்புகளை தந்து, பல உயிர்களை காப்போரின் தியாகத்தை போற்றும் வகையில், “இறக்கும் முன் உறுப்புதானம் செய்தோரின் இறுதி சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் நடக்கும்” என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

இந்த அறிவிப்பு வெளியான அடுத்த நாளே தேனியில் உடல் உறுப்பு தானம் செய்தவர் உடலுக்கு அமைச்சர் மா.சுப்பிர மணியனும், அதற்கு அடுத்த 2 நாளில் திருச்சியில் உடல் உறுப்பு தானம் செய்தவர் உடலுக்கு அமைச்சர் கே.என்.நேருவும் இறுதி மரியாதை செலுத்தினர். முதல்-அமைச்சர் அறிவித்த பிறகு 10 நாட்களில் மட்டும் 1,616 பேர் தாங்கள் இறந்த பிறகு உடல் உறுப்பு தானம் செய்வதாக எழுதிக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த தியாகத்துக்கு அரசு மரியாதை என்பது, போற்றப்பட வேண்டிய அந்த தியாக செம்மல்களுக்கு செலுத்த வேண்டிய உரிய அங்கீகாரமாகும். உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை இன்னும் அதிகமாக மக்களிடையே ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



விருதுநகரில் தெற்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு அவைத் தலைவர் செல்வமணி, தங்கராஜ் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து பேசினார்கள். உடன் குன்னூர் சீனிவாசன், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கப்பாண்டியன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வி.பி.ராஜன், அருப்புக்கோட்டை நகர் மன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, இளைஞர் நலன் அமைப்பாளர் ராஜகுரு, இளைஞர் அணி கிருஷ்ணகுமார், நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியது!

# காட்பாடியில் மற்றொரு இரயில்வே மேம்பாலம் புதிதாக அமைக்கப்படும்!

## நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

காட்பாடி, அக்.7 -

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும் வகையில் காட்பாடியில் இன்னொரு ரயில்வே மேம்பாலம் புதியதாக அமைக்கப்படும் என்று கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் தொடர்ச்சியாக பல வளர்ச்சித் திட்டங்களை பெற்று வருவது காட்பாடி தொகுதியாகும்.

1. பொன்னை மேம்பாலம், 2. திருவலம் சர்க்கரை ஆலை, 3. குடிக்க பாலாற்று தண்ணீர் (இப்போது காவிரி தண்ணீர்), 4.திருவள்ளுவர் பல்கலைக்கழகம், 5. காட்பாடியை தனி தாலுக்காவாக உருவாக்கியது, 6.நீதிமன்றங்கள், 7. சட்டக்கல்லூரி, 8. தீயணைப்பு நிலையம், 9. போக்குவரத்து காவல் நிலையம், 10.ஆரம்பப் பள்ளிகள், 11. மேல்நிலைப் பள்ளிகள், 12.உயர்நிலைப் பள்ளிகள், 13. காட்பாடியை வேலூருடன் இணைக்க விருதம்பட்டிற்கு அருகில் ஒரு பாலம், 14.அம்முண்டிபூட்டுத்தாக்கு பாலாற்று பாலம், 15.திருவலத்தில் பொன்னை ஆற்றின் மீது NH பாலம், 16.பல்வேறு அரசு அலுவலகங்கள், கலைஞர் காலத்தில் இப்படி பல திட்டங்களை பெற்றது காட்பாடி தொகுதியாகும்.

இன்றைய முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்,



1. பொன்னையாற்றில் ஒரு மேம்பாலம், 2. பரமசாத்து, குகையநல்லூர், சேண்பாக்கம், அரும்பருத்தி போன்ற இடங்களில் தடுப்பணைகள், 3. மேல்பாடி அருகில் பொன்னையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம், 4. சேர்காட்டில் 100 படுக்கைகளை கொண்ட ஒரு நவீன மருத்துவமனை, 5. ஆண்கள் கலைக் கல்லூரி, 6. இந்த ஆண்டு வரப்போகிற SIPCOT தொழிற்சாலை, 7. காங்கேயநல்லூர்சத்துவாச்சாரி பாலாற்று பாலம்., 8. கல்புதூர்ஆரப்பாக்கம் (இரத்தினகிரி) வேலூர் சுற்றுவட்ட சாலை,

இப்படிஎண்ணற்றதிட்டங்களை பெற்று வந்த காட்பாடி தொகுதிக்கு இன்றைக்கு இன்னுமோர் அரிய பெரிய திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இரயில் பாதையால் இரண்டாக பிளவுபட்டிருந்த ஊர் காட்பாடி. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்த மக்களின் போக்குவரத்திற்காக தொங்கு பாலம் போன்று ஒரு பாலத்தை கட்டினார்கள். அந்தப் பாலத்தின் மீது பெரிய வாகனங்கள் போகிறபொழுது அந்த பாலம் ஊஞ்சலாடும். அந்த பாலத்தின் ஓரத்தில் நடந்து போகிற மக்கள் பிடித்துக் கொள்ள எந்த பிடிமானமும் இருக்காது. உயிரை கையில் பிடித்துக் கொண்டு தான் அந்த பாலத்தை கடப்பார்கள்.

பிறகு, கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு அந்த பாலத்தை நவீனமாக்கி இரு வழி பாதையாக கட்டிக் கொடுத்தார்.

ஆனாலும், வளர்ந்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையால் அந்த பாலத்தில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அந்த போக்குவரத்து நெரிசலை குறைக்க இன்னுமொரு பாலம் அமைந்தால் நன்றாக இருக்கும் என்று பொதுமக்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள்.

மக்களின் கோரிக்கையை ஏற்று, பழைய பாலத்திற்கு பக்கத்திலேயே சுமார் 25 கோடி ரூபாய் செலவில் இன்னொரு இருவழிப் பாதை கோரப்பட்டுள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு Tender கோரப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தை கட்டி முடித்து பயன்பாட்டிற்கு வரும் போது காட்பாடி இரயில்வே பாலத்தின் மீது தற்போது ஏற்படுகிற நெரிசல் முழுவதுமாக குறையும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.





கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த வெளிமன்னா, தம்மை போல மாற்றுத் திறனுள்ள குழந்தைகளின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதன் மூலம் உலக அளவில் அறிமுகமாகி அதன் மூலம், பல்வேறு அங்கீகாரங்களை பெற்றவராவார். சென்னை வருகை தந்துள்ளதை தொடர்ந்து குடும்பத்தாருடன் நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் நலன் சார்ந்து அவர் எடுத்து வரும் முன்னெடுப்புகளை கேட்டறிந்து அவருடைய பணிகள் சிறக்க வாழ்த்துத் தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் போதிய நீரின்றி பாதிக்கப்பட்ட

# விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 இழப்பீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.7 -

காவிரி ஆற்றில், கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் பெறப்படாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12-6-2023 அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், காவிரி ஆற்றில் கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் தொடர்ந்து பெறப்படாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் திறந்து விட இயலாத நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- இழப்பீடாக வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5-10-2023) உத்தரவிட்டுள்ளார்கள்.

கடலூர் பதிவு மண்டலத்திற்குட்பட்ட

# சார்பதிவாளர்களின் பணித்திறன் குறித்த சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

கடலூர், அக். 7 -

கடலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தலைமையில் அரசு செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை திருமதி. பா.ஜோதிநிர்மலாசாமி, பதிவுத்துறைத்தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்அ.அருண் தம்புராஜ், ஆகியோர் முன்னிலையில் கடலூர் பதிவு மண்டலத்திற்குட்பட்ட சார்பதி வாளர்களின் பணித்திறன் தொடர்பான மண்டல சீராய்வு கூட்டம் 5ந் தேதி நடைபெற்றது.

அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது :

பதிவுத்துறையானது அரசின் முக்கியமான வருவாய் தரும் துறைகளில் ஒன்றாக உள்ளதால், தமிழக அரசின் பல்வேறு அரசு நல திட்டங்களுக்கு மூல ஆதாரமாக பதிவுத்துறை செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர்கள் தங்களது பணியில் சிறப்பாக செயல்பட்டு அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கினை அடைய முழு முயற்சியுடன் செயல்பட வேண்டும் எனவும், பதிவுத்துறையின் சேவையை நாடிவரும் பொது மக்களுக்கு உடனுக்குடன் அவர்களது தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விரைவாக செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

சார்பதிவாளர்கள் அனைவரும் வருவாய் இலக்கினை அதிகரிக்கும் நோக்கத்தோடு செயல்படவும், ஆவணப்பதிவின் போது உரிமையாளர்களை கண்டறிந்து போலி ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதை முற்றிலும் தவிர்க்கவும், கட்டடங்களை மறைத்து அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படாத வண்ணம் பதிவுத்துறை தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கைகளைப் பின்பற்றி செயல்படவும், பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை அரசால் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் செய்து முடித்திடவும் அறிவுறுத்தினார். மேலும் சார்பதிவகங்களுக்கு வழங்கப்பட்ட வருவாய் இலக்கினை முழுமையாக அடைந்திட பல்வேறு ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் இக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், கடலூர் பதிவு மண்டல, துணைப்பதிவுத்துறை தலைவர் இரா. ஜனார்த்தனம் உள்ளிட்ட பதிவுத்துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவையில்

# 'லாட்டிமர் ஹவுஸ்' கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படும்!

## கானா நாட்டின் காமல்வெல்த் மாநாட்டில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

அக்ரா (கானா நாடு), அக். 7 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் தொடர்பான லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகள் கடைப்பிடிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசுவையில் குறிப்பிட்டார்.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் 04.10.2023 அன்று கானா நாட்டில் நடைபெற்ற 66வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன், தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் உள்ளார்.

காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் 66-வது மாநாடு, கானா நாட்டின் தலைநகர் அக்ரா நகரத்தில், அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:

2003 ஆம் ஆண்டு சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் அதிகார பகிர்வுகள் மற்றும் ஊடுருவல்கள் குறித்து லாடிமர் ஹவுஸ் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டதிலிருந்து, பல காமன்வெல்த் நாடுகளில் அதிகாரப் பகிர்வுகளை உறுதிப்படுத்துவதிலும், நல்லாட்சியை மேம்படுத்துவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என நான் கருதுகிறேன். இருந்த போதிலும், காமன்வெல்த் நாடுகள் பலவற்றிலும், இக்கோட்பாடுகளை கடைபிடிப்பதில், பல்வேறு சவால்கள் மற்றும் தடைகள் நீடிக்கின்றன, மேலும், இந்த கோட்பாடுகள் காமன்வெல்த் நாடுகளில் ஜனநாயக வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தை தொடர்ந்து வழிநடத்துவதை உறுதி செய்ய தொடர்ந்து முயற்சிகள் தேவை. ஒவ்வொரு உறுப்பு நாடுகளிலும் குறிப்பிட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பரவலாக வேறுபடலாம், மேலும், 2023-ல் இந்த கோட்பாடுகளின் நிலை ஒவ்வொரு நாட்டின் தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராக பொறுப்பேற்று, செம்மையாக ஆட்சி செய்து, தான் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில், திறமையான நிர்வாகத்தை வழங்கி, தமிழ்நாடு முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணிகளை நாள்தோறும் வழங்கிவரும், நமது அன்புக்குரிய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளில் லாட்டிமர் ஹவுஸ் கோட்பாடுகளை கடைப்பிடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறேன்.

மேலும், சட்டமன்றம், நீதிமன்றம் நிர்வாகம் ஆகிய ஒவ்வொரு பிரிவும் ஒன்றோடுஒன்று இணைந்து செயல்படும் என உறுதியாக நம்புகிறேன்.

இந்த மாநாட்டில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது குறித்து என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்வதோடு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசினார்.

# சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

## உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, அக். 7 -

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசு கடந்த 2021-ல் புதிய மதுபான கொள்கையை அமல்படுத்தியது. இதில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆகியவை தனித்தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

இந்த வழக்கில் டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், மணிஷ் சிசோடியா தாக்கல் செய்த ஜாமீன் மனு, உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் கூறியதாவது:

டெல்லி மதுபான கொள்கை விவகாரத்தில் லஞ்சம் கைமாறியதாக கூறுகிறீர்கள்.

யார் அதை வழங்கினார்கள்?

இந்த வழக்கில் மணிஷ் சிசோடியா மீதான புகாருக்கு ஆதாரம் எங்கே?

தினேஷ் அரோரா என்பவரின் வாக்குமூலத்தைத் தவிர வேறு ஏதாவது ஆதாரமோ, ஆவணமோ இருக்கிறதா?

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ் இவர் மீது எப்படி குற்றம்சாட்டுகிறீர்கள்?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.



மதுரை மன்னர் திருமலை நாயக்கர் அரண்மனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (05.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் 21.10.2023 மற்றும் 22.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக "தமிழ்நாடு சாம்பியன்ஸ்" அறக்கட்டளை சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ-ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.


நாள் : 07.10.2023
சனிக்கிழமை காலை 9.30 மணி
இடம் : கலைஞர் அறிவாலயம்,
திருச்சி.
தி.மு.க. மகளிர் அணி
மற்றும் மகளிர் தொண்டரணி
மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்ற வருகை தரும்
திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி.
அவர்களை வருக. வருக.. என வரவேற்கிறோம்..
அழைத்து மகிழும்
திருச்சி வடக்கு மற்றும் மத்திய மாவட்ட மகளிர் அணி
ARASU ARTS


அக்டோபர் – 7ல்
அன்பு மகன்
ஜெ.வசந்த் B.E.,
அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு
58வது வட்ட திமுக சார்பாக
10000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
நேரம் : காலை 9 மணி
இடம் : புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி
மேலப்பொன்னகரம் 2வது தெரு, மதுரை.
விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு. P.மூர்த்தி B.A.,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர், மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. மு.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
வருக! வருக!
அன்புடன் அழைக்கும் : மா.ஜெயராம் M.A.,MC
தலைமை செயற்குழு உறுப்பினர்
SM FLEX


தி.மு.க. மகளிர் அணி & மகளிர் தொண்டர் அணி
புதிய மாவட்ட நிர்வாகிகள்
அறிமுகக் கூட்டம்
தலைமை
திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி.,
கழக துணைப் பொதுச்செயலாளர்
வரவேற்புரை
திருமிகு. பவானி ராஜேந்திரன் EX.எம்.பி.,
மகளிர் அணி துணைச் செயலாளர்
சிறப்புரை
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர்
முன்னிலை
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
மாண்புமிகு ஆதி திராவிடர் & பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்
திருமிகு. என். கயல்விழி செல்வராஜ்
மகளிர் அணி துணைச் செயலாளர்
திரு. ந.தியாகராஜன் எம்.எல்.ஏ.,
திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
திரு. க.வைரமணி
திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்
திருச்சி மாநகர மேயர்
திரு. மு.அன்பழகன்
திருச்சி மேற்கு மாநகரச் செயலாளர்
திருமிகு. தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.,
மகளிர் தொண்டர் அணி இணைச் செயலாளர்
திருமிகு. குமரி விஜயகுமார்
மகளிர் அணி இணைச் செயலாளர்
திரு. மு.மதிவாணன்
திருச்சி கிழக்கு மாநகரச் செயலாளர்
வாழ்த்துரை
திருமிகு. விஜயா தாயன்பன்
மகளிர் அணித் தலைவர்
திருமிகு. ஹெலன் டேவிட்சன் EX.எம்.பி.,
மகளிர் அணிச் செயலாளர்
திருமிகு. நாமக்கல் ராணி
மகளிர் தொண்டர் அணிச் செயலாளர்
திருமிகு. ரத்னா லோகேஸ்வரன் எம்.சி.,
மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்
நன்றியுரை
திருமிகு. அமலு எம்.எல்.ஏ.,
மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர்
நாள்: 07-10-2023, சனிக்கிழமை காலை 9:30 மணி
இடம் : கலைஞர் அறிவாலயம், 21, கரூர் புறவழிச்சாலை, சத்திரம் பேருந்து நிலையம் அருகில், திருச்சி - 620002
அனைவரும் வாரீர் – அன்போடு அழைக்கின்றோம்.
தி.மு.க.மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக்குழு


தமிழினத் தலைவர் கலைஞர்
அவர்களின்
நூற்றாண்டு விழாவினையொட்டி
தி.மு.க.சட்டத்துறையின் சார்பில்
சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும்
மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட
இளம் வழக்கறிஞர்களுக்கான
பேச்சு போட்டி
நாள்: 07.10.2023
இடம்: அரசு சட்டக்கல்லூரி,பாளையங்கோட்டை.
திருநெல்வேலி
நாள்: 08.10.2023 இடம்: எல்.எஸ்.திருமண மஹால்,
அரசு சட்டக்கல்லூரி அருகில்,பாளையங்கோட்டை.
திருநெல்வேலி
1, கலைஞரின் பார்வையில் சமூக நீதி
2, கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி
3, கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்
4, கலைஞரின் பார்வையில் தொழில் வளம்
5, கலைஞரின் பார்வையில் கல்வி
பரிசுகள் வழங்கி விழா சிறப்புரை
என்.ஆர்.இளங்கோ எம்.ஏ.,பி.எல்.,
சட்டத்துறை செயலாளர்
டி.பி.எம்.மைதீன்கான்
திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர்
பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்
கே.எஸ்.இரவிச்சந்திரன்
சட்டத்துறை இணைச்செயலாளர்
ஜெ.பச்சையப்பன்
சட்டத்துறை துணைச்செயலாளர்
கே.சந்துரு
சட்டத்துறை துணைச்செயலாளர்
கே.ஜே.சரவணன்
தலைமை கழக வழக்கறிஞர்
எம்.காமினிதேவன் எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி
எஸ்.ராஜா முஹம்மது எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட தலைவர், திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி
கலைஞர் 100 1924 - 2023
தி.மு.க. சட்டத்துறை
DMK LEGAL WING
திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி



தேனி வடக்கு மாவட்டம் இளைஞர் அணி சார்பாக போடியில் 33 வார்டுகளில் நேரடியாகச் சென்று இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரனிஸ்வரன், தெய்வேந்திரன், நகரச் செயலாளர் புருஷோத்தமன், செயற்குழு உறுப்பினர் சங்கர், பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜசேகர், தொ.மு.ச. டாஸ்மாக் மாநில செயலாளர் சுரேஷ் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### உலக சுற்றுலாப் பயணிகள் விரும்பும் வகையில்

# தமிழ்நாட்டை மேம்படுத்த பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் பேச்சு!



சென்னை, அக். 7 -

சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாகதமிழ்நாட்டைஉருவாக்கும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில்செயல்பட்டுவரும் சுற்றுலாவளாககூட்டரங்கில் சுற்றுலாத்துறை யின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள்குறித்தசுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக்கழகதலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலாஇயக்குநர்மற்றும்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் .சந்தீப்நந்தூரி ஆகியோர்முன்னிலையில் நேற்று முன்தினம் (05.10.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில்அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது,

முதலமைச்சர்அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயேதமிழ்நாடுஅதிகஅளவில்வெளிநாட்டுமற்றும்உள்நாட்டுசுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலா மையமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளைஅறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம்மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்று லாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில்கூடுதல்வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரிமாவட்டம்ஒகேனக்கல் சுற்றுலா த்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடுபடகுஇல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார்மற்றும்பொதுபங்களிப்புதிட்டத்தின்கீழ்200நபர்கள் அமரும் வகையிலான இரண்டுஅடுக்குகள்கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகைபடகுகுழாமில்ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலாமேம்பாட்டுபணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில்படகுசவாரி,நீர் விளையாட்டுகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும்,தருமபுரிமாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா, திறந்த வெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்றுஅழைக்கப்படும்குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்தும் பணிகளும்,கன்னியாகுமரிமாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்த லங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும்,தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில்நீர்விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட்டு கள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத்தலமாகமேம்படுத்தப்படுத்தும் பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில்உள்ளமுத்துக்குடாகடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடிமதிப்பீட்டில்நீர்விளையாட்டுகள், படகு சவாரி, நடைபாதை, கடற்கரை விளையாட்டுகள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அதனைசெயல்படுத்தும்பணிகள்முழுவீச்சில்நடைபெற்று வருகின்றன.

சுற்றுலாதலங்களில்வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும்போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிகளுக்குமுக்கியத்துவம்அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும்வகையில்சுற்றுலாஅலுவலர்கள்பணியாற்றிடவேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பா ட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண் டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணி கள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தல மாக தமிழ்நாட்டை உருவாக்கும்

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ. கமலா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக திட்ட பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழக அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்

பொறுப்புகளுக்கான நேர்காணல்

இளைஞர் அணி செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–4 மற்றும் மண்டலம்–5–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 09.10.2023 திங்கள்கிழமையும், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு 10.10.2023 செவ்வாய்க்கிழமையும், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 11.10.2023 புதன்கிழமையும், கோவை மாநகர், கோவை தெற்கு, கோவை வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 12.10.2023 வியாழக்கிழமையும், நீலகிரி மாவட்டக் கழகத்துக்கு 13.10.2023 வெள்ளிக்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மண்டலம்–4

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | சேலம் கிழக்கு | 09/10/2023 | காலை 9.00 மணி | ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபம், ஐந்து ரோடு, சேலம். |
| 2 | சேலம் மத்திய | 09/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 3 | சேலம் மேற்கு | 09/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 4 | நாமக்கல் கிழக்கு | 10/10/2023 | காலை 9.00 மணி | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 5 | நாமக்கல் மேற்கு | 10/10/2023 | மதியம் 2.00 மணி | கொங்கு திருமண மண்டபம், திருச்செங்கோடு |
| 6 | ஈரோடு தெற்கு | 11/10/2023 | காலை 9.00 மணி | ஸ்ரீ தங்கம் மஹால், மேட்டுக்கடை – பெருந்துறை ஆர்.எஸ்.சாலை, ஈரோடு. |
| 7 | ஈரோடு வடக்கு | 11/10/2023 | மதியம் 2.00 மணி | ஸ்ரீ கார்த்திகேயன் மஹால், காலேஜ் பிரிவு, கரட்டிபாளையம், கோபிசெட்டிபாளையம். |

## மண்டலம்–5

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கோவை மாநகர் | 12/10/2023 | காலை 9.00 மணி | சுகுணா மினி ஹால் காளப்பட்டி சாலை, கோவை. |
| 2 | கோவை தெற்கு | 12/10/2023 | மதியம் 11.00 மணி | |
| 3 | கோவை வடக்கு | 12/10/2023 | மதியம் 2.30 மணி | |
| 4 | நீலகிரி | 13/10/2023 | காலை 10.00 மணி | கலைஞர் அறிவாலயம், மாவட்டக் கழக அலுவலகம், உதகை. |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 05–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி


### மகளிர் உரிமை மாநாடு!

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் - மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை!

நாகர்கோயில், அக். 7 -

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டிற்குச் செல்வதற்காக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 05.10.2023, வியாழக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. ஜெனஸ் மைக்கேல் அவர்கள் தலைமையில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. லதா கலைவாணன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் மற்றும் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன் ஹெலன் டேவிட்சன் ஆகியோர்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட அனைத்து மாவட்ட, மாநகர, ஒன்றிய கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மாநகர, நகர, பேரூராட்சி, ஒன்றிய கவுன்சிலர்கள் மற்றும் ஊராட்சியைச் சார்ந்த வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 14 ஆம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது. பெண்ணுரிமைப் போற்றும் இந்த மாநாட்டில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திலிருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட கட்சியின் மகளிர் அணியைச் சார்ந்த அனைவரையும், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளையும் மற்றும் அனைத்து மகளிர் சகோதரிகளையும் கலந்து கொள்ள செய்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் "நாற்பதும் நமதே, நாடும் நமதே" என்று வலியுறுத்தி வரும் கழக தலைவர்- தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டி காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கவுன்சிலர்கள், வார்டு உறுப்பனர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள் அனைவரும் சிறப்பாக களப் பணியாற்றிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



மகளிர் உரிமை மாநாட்டுக்குச் செல்வதற்கான கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கர்நாடகாவில் பா.ஜ.க.வுடன் ம.ஜ.த.கட்சி இணைந்ததால் - சிறுபான்மையினர் அதிருப்தி!

# நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணிக்கு பிரகாசமான வெற்றி வாய்ப்பு!

## 'தினகரன்' நாளேட்டில் தலையங்கம்!

சென்னை, அக். 7 -

கர்நாடக மாநிலத்தில் மதச் சார்பற்ற ஜனதாதளக் கட்சி பா.ஜ.க. கூட்டணியில் இணைந்ததால் சிறுபான்மையினர் வாக்கு வங்கி பாதிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என 'தினகரன்' நாளேடு 6.10.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்
அக்டோபர் 6, 2023 வெள்ளிக்கிழமை

கூட்டணி அதிருப்தி

நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய பாஜவுடன் கூட்டணி என்று மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவகவுடா முடிவு செய்து அறிவித்தார். இதை கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமியும் வழிமொழிந்தார். இதை விமர்சித்த காங்கிரஸ் கட்சி 'தேவகவுடா அவரது கட்சியில் இருந்து மதசார்பற்ற என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்' என்று கூறியது. காங்கிரஸ் கட்சி விமர்சிப்பது அரசியல் ரீதியானது என்று எடுத்து கொண்டாலும் மதசார்பற்ற ஜனதா தள நிர்வாகிகளே இக்கூட்டணியை விரும்பாமல் அதிருப்தியும், எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

கர்நாடகாவில் மண்டியா, ராம்நகரம், சென்னபட்டணா, கோலார், ஹாசன் உள்ளிட்ட சில பகுதிகளில் மதசார்பற்ற ஜனதா தள கட்சிக்கு கணிசமான

அத் தலையங்க விவரம் வருமாறு:

நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க.வுடன் கூட்டணி என்று மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவகவுடா முடிவு செய்து அறிவித்தார். இதை கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமியும் வழிமொழிந்தார். இதை விமர்சித்த காங்கிரஸ் கட்சி 'தேவகவுடா அவரது கட்சியில் இருந்து மதசார்பற்ற என்ற வார்த்தையை எடுத்து விடலாம்' என்று கூறியது. காங்கிரஸ் கட்சி விமர்சிப்பது அரசியல்ரீதியானது என்று எடுத்துக் கொண்டாலும் மத சார்பற்ற ஜனதா தள நிர்வாகிகளே இக்கூட்டணியை விரும்பாமல் அதிருப்தியும், எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

கர்நாடகாவில் மண்டியா, ராம்நகரம், சென்னபட்டணா, கோலார், ஹாசன் உள்ளிட்ட சில பகுதிகளில் மதசார்பற்ற ஜனதா தள கட்சிக்கு கணிசமான வாக்கு வங்கி இருக்கிறது. அதிலும் குறிப்பாக இஸ்லாமியர்களின் வாக்குகள் அதிகம் இருக்கிறது. இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தலில் ம.ஜ.த. பா.ஜ.வு.டன் கூட்டணி அமைத்ததால் ம.ஜ.த.வில் இருக்கும் சிறுபான்மையின பிரிவு தலைவர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இதில் பல மாவட்ட இஸ்லாமிய தலைவர்கள், நிர்வாகிகள் பதவியை ராஜினாமாவே செய்து விட்டனர்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது இஸ்லாமியர்களின் வாக்கு ம.ஜ.த.வுக்கு கிடைக்கவேயில்லை என்றும் அதனால் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறுவதால் எந்த நஷ்டமும் இல்லை என்றும் குமாரசாமி கருத்து தெரிவித்தார். குமாரசாமியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு அக்கட்சியின் மாநில தலைவரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான சி. எம்.இப்ராஹிம் பதிலடி கொடுத்துள்ளார். கடந்த சட்டமன்ற தேர்தலில் முஸ்லிம் வாக்குகள் ம.ஜ.த.வுக்கு கிடைக்கவில்லை என்று சொல்வது உண்மையில்லை. 20 சதவீத வாக்குகள் ம.ஜ.த.வுக்கு கிடைத்துள்ளது.

ம.ஜ.த.- பா.ஜ.க. கூட்டணியில் எங்களுக்கு விருப்பமில்லை. அதிருப்தியில் தான் இருக்கிறோம். வரும் 16ஆம் தேதி கட்சியில் உள்ள அனைத்து தரப்பினருடனும் ஆலோசித்து அதன் பிறகு எடுக்கப்படும் முடிவு குறித்து தேவகவுடாவிடம் தெரிவிப்பேன் என்று கூறியுள்ளார். ம.ஜ.த.வில் உள்ள சிறு பான்மையினர் கூண்டோடு வெளியேறினால் அவர்கள் அனைவரும் நிச்சயம் காங்கிரஸ் கட்சியில் தான் இணைவார்கள். இதனால் கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சிக்கு நாடாளுமன்ற தேர்தலில் பிரகாசமான வெற்றி வாய்ப்பு ஏற்படும் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது.

பா.ஜ.வுடன் கூட்டணி அறிவித்த நாள் முதல் மதசார்பற்ற ஜனதா தள கட்சியில் அதிருப்தி ஏற்பட்டு நிர்வாகிகளின் ராஜினாமா தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. கூட்டணி அறிவித்த கையோடு தொகுதி உடன்பாடு செய்து கொண்டு பிரசாரத்தில் டிசம்பர் மாதம் முதல் களம் இறங்க திட்ட மிட்டிருந்த கர்நாடக பா.ஜ. தலைவர்கள் இதனால் குழப்பத்தில் உள்ளனர். இதே போன்று தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அதிமுக விலகிவிட்டது. ஆந்திராவில் தேசிய ஜனநாயக கூட்டணி யில் இருந்து நடிகர் பவன்கல்யாண் கட்சி வெளியேறிவிட்டது. இப்படி அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணிக்கு எதிர்ப்பு வலுத்து வருவதால் பா.ஜ.க. தேசிய தலைமையும், மாநில தலைமையும் விழிபிதுங்கி நிற்கின்றனர். இந்த பிரச் சினையை எப்படி கையாள்வது என்று பா.ஜ.க மூத்த தலைவர்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறார்களாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டுள்ள வள்ளலார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஆ.பி.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் திட்ட அலுவலர் ராம. சிவராமன்,முதன்மைக்கல்வி அலுவலர் பாலுமுத்து, பேரூராட்சி துணைத் தலைவர் கான் முகமது ஆகியோர் உள்ளார்கள்.

### 5 மாநில சட்டமன்ற தேர்தல்

## தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்தில் விவாதம்

புதுடெல்லி, அக்.7-

சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம், தெலங்கானா, மிசோரம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் வருகிற நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகின்றது.

ராஜஸ்தான், மிசோரம், மத்தியப்பிரதேசம் மற்றும் சட்டீஸ்கரில் தேர்தல் ஆணைய குழு ஏற்கனவே நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது. இதனை தொடர்ந்து 5 மாநில தேர்தல் குறித்த அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது. இதனையொட்டி தேர்தல் பார்வையாளர்களுக்கான கூட்டம் நேற்று டெல்லியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காவல் துறை, பொது மற்றும் செலவின கண்காணிப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

தேர்தலில், தேர்தல் நடத்தை விதிகளை சிறப்பாக செயல்படுத்தவும், பண பலமும், ஆள் பலமும் இடையூறு செய்யாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அடுத்த சில நாட்களில் 5 மாநில சட்டமன்ற தேர்தல் தேதிகளை ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### வள்ளலார் விழாவில் ஆளுநரின் பேச்சு!

## வேண்டாத வேலைகளை விட்டுவிட்டு உருப்படியாக யோசிப்பது நல்லது!

### "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக்.7-

வடலூரில் நடைபெற்ற வள்ளலார் விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார். இத்தகைய வேண்டாத வேலைகளை விட்டுவிட்டு ஆளுநர் உருப்படியாக யோசிப்பது நல்லது என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

வள்ளலார் என்றழைக்கப்பட்ட இராம லிங்க அடிகளாரின் 200ஆவது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது.இதையொட்டி கடந்த ஓராண்டாக தமிழ்நாடு அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளது. வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்பும் பல்வேறு திட்டங்களை மாநில அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

வள்ளலாரின் முக்கியமான பாடல்கள் மற்றும் கருத்துக்களைத் தொகுத்து இந்தி உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மொழி களிலும் வெளியிட வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட அயல் நாட்டு மொழிகளிலும் வெளியிடுவதன் மூலம் வள்ளலாரை உலக மக்கள் புரிந்து கொள்ள முடியும். திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டதால் தான் அதன் பெருமையை உலகமறிந்தது.

வடலூரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றுப் பேசிய ஆளுநர் ஆர்.என். ரவி வள்ளலார் சனாதனத்தின் உச்சம் என்று கூறி அவரை இழிவு படுத்தினார். இதற்கு தமிழறிஞர்கள் மத்தியிலிருந்து மட்டுமல்ல, வள்ளலாரின் சமரச சுத்த, சன்மார்க்க நெறியை பின்பற்று பவர்களிடமிருந்தும் கடும் எதிர்ப்பு எழுந்தது. சாதி, மத வேறுபாடுகளையும், பெண்ணடிமைத் தனத்தையும், மூட நம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடியவர் வள்ளலார். அதற்கு நேர் எதிரான முகாமிலிருக்கும் ஆளுநர் வள்ளலாரை மீண்டும் சீண்டியுள்ளார்.

"வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் பாடல் தான் சனாதனத்தின் சாரம் என்று ஆளுநர் மீண்டும் உளறி யுள்ளார். வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உள்ளத்தை குறுகிய புத்தியும், நரித்தனமும் கொண்ட ஆளுநர் தொடர்ந்து அவமதிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதனிடையே, நந்தனார் பிறந்த ம.ஆதனூர் கிராமத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபநயனம் எனும் சடங்கை செய்து பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சியில் ஆளுநர் பங்கேற்றுள்ளார். பிறப்பினால் யாரும் உயர்வு தாழ்வு இல்லை; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் நெறிக்கு மாறாக பூணூல் அணிவதன் மூலம் ஒருவரை மேல்நிலையாக்கம் செய்ய முடியும் என்பதுதான் இந்த நிகழ்வின் பொருள். இராமானுஜர், வள்ளலார், அய்யன் காளி, நாராயணகுரு, வைகுண்ட சாமிகள் போன்றவர்கள் சமய வரம்புக்குள் நின்று சாதியை ஒழிக்க போராடினர். ஆனால் பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சி அத்தகையது அல்ல. இந்த காலத்திற்கு அது பொருந்தக்கூடியதும் அல்ல. எனவே ஆளுநர் இத்தகைய வேண்டாத வேலைகளை விட்டு விட்டு உருப் படியாக எதையாவது யோசிப்பது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 6 வெள்ளிக்கிழமை

வள்ளலார் விழாவும், ஆளுநர் சேட்டையும்

வள்ளலார் என்றழைக்கப்பட்ட இராம லிங்க அடிகளாரின் 200ஆவது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது. இதையொட்டி கடந்த ஓராண்டாக தமிழ்நாடு அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளது. வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்பும் பல்வேறு திட்டங்களை மாநில அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

வள்ளலாரின் முக்கியமான பாடல்கள் மற்றும் கருத்துக்களைத் தொகுத்து இந்தி உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மொழி களிலும் வெளியிட வேண்டும். ஆங்கிலம் உள்ளிட்ட அயல்நாட்டு மொழிகளிலும் வெளியிடுவதன் மூலம் வள்ளலாரை உலக மக்கள்


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/3113/2023 **குறுகிய e – ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**ஒரு வருடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து கணினிகள், வன்பொருள், மென்பொருள் மற்றும் நுகர்பொருட்களுடன் வசதி மேலாண்மை சேவை மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி.**

| | |
|---|---|
| பணியின் மதிப்புத் தொகை 3,89,39,495/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 3,89,395/- |

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **16.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **17.10.2023 பிற்பகல் 3.15 மணி** முன் விளக்க கூட்ட நாள் **10.10.2023 பிற்பகல் 3.30 மணிக்கு,** தகவல் தொழில் நுட்ப மையம், அம்மா மாளிகை, 1வது தளம், **'B'** பிரிவு ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 600003

செ.ம.தொ.இ / 5447 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டல போக்குவரத்து கழக பணியாளர்களுக்கு மதுரை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் மூலம் நடைபெற்ற இலவச கண் பரிசோதனை முகாமினை பொது மேலாளர் டேனியல் சாலமன் தொடங்கி வைத்தார். திண்டுக்கல் மண்டலத்திற்குட்பட்ட திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 16 பணிமனைகளில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சையில் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## 'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' – முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்! முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

சென்னை,அக்.7-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் எழுச்சியுடன் நேற்று (6.10.2023) மாலை நடைபெற்றது.

தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டது. வரவேற்பு தோரணங்கள், கழகக்கொடிகள் அமைக்கப்பட்டு உற்சாக மிகுதியில் தஞ்சை மாநகரம் திகழ்ந்தது. திராவிடர் கழகம், தி.மு.க. உள்ளிட்ட சமூகநீதியில் அக்கறை கொண்டுள்ளவர்கள் தங்களின் குடும்ப விழாவாக கருதி விழாவுக்குத் திரண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று (6.10.2023-வெள்ளிக்கிழமை) மாலை 5 முதல் 8:30 வரை தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி மாநாட்டு அரங்கத்தில் தஞ்சை எஸ்.என்.எம். உபயதுல்லா நினைவரங்கம் இராஜகிரி கோ.தங்கராசு நினைவு மேடையில் நடைபெற்றது.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் வரவேற்புரையாற்றினார்.

கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ.அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**'தாய் வீட்டில் கலைஞர்' நூல் வெளியீடு!**

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த 'தாய் வீட்டில் கலைஞர்' நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட, முதல் படியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக் கொண்டார். தஞ்சை மத்திய தி.மு.க. மாவட்டச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் – சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சை மாநகர தி.மு.க.செயலாளர், – மேயர் சண்.இராமநாதன், தி.மு.க. மருத்துவரணி மாநில துணைச் செயலாளர் – துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் நூலைப் பெற்றுக்கொண்டனர்.

**விழாவில் பாராட்டுரை!**

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில மேனாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன் அய்.ஏ.எஸ்., தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார் ஆகியோர் பாராட்டுரை ஆற்றினர்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாத் தலைமையேற்று சிறப்புரை, பாராட்டுரை ஆற்றினார்.

'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஏற்புரை ஆற்றினார்.

தஞ்சாவூர் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சி. அமர்சிங் நன்றியுரை ஆற்றினார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்கினார்.

விழாவில், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.கணேசன், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணா துரை, மயிலாடுதுறை தொகுதி நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் செ.இராம லிங்கம், அரசு தலைமைக் கொறடா சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், தி.மு.க.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக் குமார், து.செல்வம், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கே.டி.மகேஷ் கிருஷ்ண சாமி, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ச.இறைவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர், தி.மு.க. உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சை ஒன்றியக் குழுத் தலைவர், தி.மு.க. வைஜெயந்திமாலா கேசவன் உள்பட தி.மு.க. பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

விழாவில் திராவிடர் கழகப் பொறுப்பாளர்கள் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, வெளியுறவுச் செயலாளர் கோ.கருணாநிதி, துணைப் பொதுச் செயலாளர்கள் பொறியாளர் ச. இன்பக்கனி, வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, வழக்குரைஞரணி தலைவர் வழக்குரைஞர் த.வீர சேகரன், தொழிலாளரணி மாநிலச் செயலாளர் மு.சேகர், மாநில கிராமப் பிரச்சாரக் குழு அமைப்பாளர் முனைவர் அதிரடி க.அன்பழகன், திராவிடர் விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் குடவாசல் க.வீரையன், மாநில இளைஞரணிச் செயலாளர் த.சீ.இளந்திரையன், திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா.செந்தூரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, திராவிட மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் பா.மணியம்மை, கழகக் காப்பாளர்கள் வெ.ஜெயராமன், மு.அய்யனார், தலைமைக் கழக அமைப்பாளர் குடந்தை க.குருசாமி, தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருணகிரி, மன்னார்குடி மாவட்டத் தலைவர் ஆர்.பி. எஸ்.சித்தார்த்தன், பட்டுக்கோட்டை மாவட்டத் தலைவர் பெ.வீரையன், கும்பகோணம் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் கு.நிம்மதி, பட்டுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வை. சிதம்பரம், கும்பகோணம் மாவட்டச் செயலாளர் சு.துரைராஜ், மன்னார்குடி மாவட்டச் செயலாளர் கோ.கணேசன், தஞ்சை மாநகரத் தலைவர் பா.நரேந்திரன், தஞ்சை மாநகரச் செயலாளர் அ.டேவிட் வரவேற்பாளர்களாக களப் பணி ஆற்றினர்.

**'திராவிடமே வெல்லும்' கலை நிகழ்ச்சிகள்!**

மாலை 5 மணிக்கு தெற்கு நத்தம் சித்தார்த்தன், உறந்தை கருங்குயில் கணேசன், திருத்தணி பன்னீர்செல்வம் இணைந்து வழங்கும் 'திராவிடமே வெல்லும்!' பெரியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திராவிடர் கழக தலைமை நிலையம் விழாவை ஒருங்கிணைத்து நடத்தியது.



ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, புலியூர் நத்தம் ஊராட்சி, முத்துநாயக்கன்பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலை கட்டிடத்தை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடிமைப் பொருட்களை வழங்கினார். உடன் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஒட்டன்சத்திரம் ஒன்றிய குழு தலைவர் அய்யம்மாள் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. துரைராஜன்

**அக்டோபர் 7 (2017)**



**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிக்கை !

## மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி, நகரம், பேரூரில் உள்ள வார்டுகள்தோறும் BLA 2 , BLC கூட்டம் ! தொகுதி பொறுப்பாளர்கள் என்.இளையராஜா ஜித்து (எ) ராஜரெத்தினம், மன்னை த.சோழராஜன் முன்னிலையில் நடைபெறுகிறது

**மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது**



கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் வார்டு வார்டுகளாக உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள் BLA2, BLC வைத்து அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக ெ சயலாளர்கள் தலைமையிலும், தொகுதி பொறுப்பாளர்கள், பூம்புகார் – என்.இளையராஜா, மயிலாடுதுறை – ஜித்து (எ) ராஜரெத்தினம், சீர்காழி – மன்னை த.சோழராஜன் முன்னிலையிலும், மாநில, மாவட்ட, சார்பு அணி நிர்வாகிகள், கீழ்க்கண்ட அட்டவணைப்படி வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தினை சிறப்பாக நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் :** குத்தாலம் மேற்கு
**தலைமை:** A.R. ராஜா, ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச் சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | எழுமகளூர் | 08.10.2023 | 222 | 1. ஜி.என்.ரவி தலைமை செயற்குழு உறுப்பினர் 2.முருகப்பா மா.இலக்கிய அணி அமைப்பாளர் 3.பிரபாகரன் மா.வழக்கறிஞர் அணி அமைப்பாளர் 4.V.S.N. செந்தில் மா.மாணவர் அணி அமைப்பாளர் 5.விக்னேஷ் மா.தகவல் தொ.து. அணி அமைப்பாளர் |
| 2 | கங்காதரபுரம் | 08.10.2023 | 220, 221 | |
| 3 | மாந்தை | 08.10.2023 | 219 | |
| 4 | நக்கம்பாடி | 08.10.2023 | 215 TO 218 | |
| 5 | பாலையூர் | 08.10.2023 | 199 TO 201 | |
| 6 | பருத்திக்குடி | 08.10.2023 | 213 214 | |
| 7 | காஞ்சிவாய் | 08.10.2023 | 205 | |
| 8 | கோமல் | 21.10.2023 | 192 TO 198 | |
| 9 | கொழையூர் | 21.10.2023 | 186 | |
| 10 | மருத்தூர் | 21.10.2023 | 181 | |
| 11 | கொத்தங்குடி | 21.10.2023 | 195 | |
| 12 | கோனேரிராஜபுரம் | 23.10.2023 | 209 TO 212 | |
| 13 | சிவனாகரம் | 23.10.2023 | 208 | |
| 14 | கோமங்கலம் | 23.10.2023 | 206,207 | |
| 15 | கருப்பூர் | 23.10.2023 | 203, 204 | |
| 16 | பேராவூர் | 23.10.2023 | 202 | |
| 17 | கொக்கூர் | 23.10.2023 | 179, 180 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் :** செம்பனார்கோவில் தெற்கு & தரங்கை பேரூர்
**தலைமை:** M.அப்துல்மாலிக், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | அரசூர் | 11.10.2023 | 233, 234 | 1)P.M.ஸ்ரீதர் (தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி, ஒருங்கிணைப்பாளர்) 2)Z.ஹர்ஷத் தலைமை பொதுக்குழு உறுப்பினர், 3)வைத்தியநாதன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் 4) காளி.தேசப்பன் மா.மீ.அணி அமைப்பாளர் |
| 2 | கொத்தங்குடி | 11.10.2023 | 263,264,265 | |
| 3 | விளாகம் | 11.10.2023 | 265 | |
| 4 | நல்லாடை | 11.10.2023 | 266,267 | |
| 5 | திருவிளையாட்டம் | 11.10.2023 | 237,260,261 | |
| 6 | எரவாஞ்சேரி | 11.10.2023 | 259 | |
| 7 | சச்சங்குடி | 16.10.2023 | 236 | |
| 8 | நரசிங்கநத்தம் | 16.10.2023 | 126 | |
| 9 | கூடலூர் | 16.10.2023 | 238 | |
| 10 | நெடுவாசல் | 16.10.2023 | 257,258 | |
| 11 | விசலூர் | 16.10.2023 | 256 | |
| 12 | திருவிடைக்கழி | 16.10.2023 | 254,255 | |
| 13 | தில்லையாடி | 16.10.2023 | 250,251,252, 253 | |
| 14 | உத்திரங்குடி | 20.10.2023 | 272,273,274,275 | |
| 15 | இலுப்பூர் | 20.10.2023 | 268,269,270,271 | |
| 16 | எடுத்துக்கட்டி | 20.10.2023 | 276,277,278,279 | |
| 17 | திருக்களாச்சேரி | 20.10.2023 | 280 TO 285 | |
| 18 | காட்டுச்சேரி | 20.10.2023 | 286,287,288 | |
| 19 | சந்திரபாடி | 20.10.2023 | 305,306 | |
| 20. | தரங்கை பேரூர் வார்டு 1 to 18 | 20.10.2023 | 264 to 304 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் :** செம்பனார்கோவில் வடக்கு
**தலைமை:** P.M.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | கஞ்சா நகரம் | 13.10.2023 | 1,2,3 | 1)மு.ஞானவேலன் (மா.து.செயலாளர்) 2) N. விஜயபாலன் Ex.M.L.A. 3)காளி. தேசப்பன் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் 4) ஜெ.கபிலன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 2 | ஆறுபாதி | 13.10.2023 | 4 TO 8 | |
| 3 | மேலையூர் | 13.10.2023 | 9,10 | |
| 4 | கருவாழக்கரை | 13.10.2023 | 11,12 | |
| 5 | நடுக்கரை | 13.10.2023 | 13, 14,15 | |
| 6 | ஈஞ்சையூர் | 13.10.2023 | 16 TO 20 | |
| 7 | கிடாரங்கொண்டான் | 13.10.2023 | 21 TO 25 | |
| 8 | தலைச்சங்காடு | 13.10.2023 | 26 TO 30 | |
| 9 | மேலப்பெரும்பள்ளம் | 13.10.2023 | 31, 32, 33 | |
| 10 | கீழப்பெரும்பள்ளம் | 15.10.2023 | 34,35 | |
| 11 | மருதம்பள்ளம் | 15.10.2023 | 57, 58,59 | |
| 12 | கிடங்கல் | 15.10.2023 | 60,61 | |
| 13 | மாமாகுடி | 15.10.2023 | 62,63 | |
| 14 | காளகஸ்திநாதபுரம் | 15.10.2023 | 64,65,66 | |
| 15 | முடிகண்டநல்லூர் | 15.10.2023 | 67 TO 70 | |
| 16 | செம்பனார்கோவில் | 15.10.2023 | 71 TO 74 | |
| 17 | பரசலூர் | 15.10.2023 | 75 TO 81 | |
| 18 | மடப்புரம் | 15.10.2023 | 85 TO 88 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் :** மயிலாடுதுறை வடக்கு & மணல்மேடு பேரூர்
**தலைமை:** N.இளையபெருமாள், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | திருச்சிற்றம்பலம் | 08.10.2023 | 23 TO 25 | 1)R.அருள்செல்வன் EX.M.L.A. மாநில விவசாய அணி இணை செயலாளர் 2)S. செல்வமணி மா.து. செயலாளர் 3). இரா.மனோகரன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் 4). சாந்தி மா.மகளிர் அணி அமைப்பாளர் 5).சர்வோதயன் மா.இளைஞர் அணி து.அமைப்பாளர் |
| 2 | முடிகண்டநல்லூர் | 08.10.2023 | 21, 22 | |
| 3 | கடலங்குடி | 08.10.2023 | 26 TO 29 | |
| 4 | பூதங்குடி | 08.10.2023 | 30 | |
| 5 | ஆத்தூர் | 08.10.2023 | 31, 32 | |
| 6 | தேரிங்கன் | 08.10.2023 | 55, 56 | |
| 7 | நமச்சிவாயபுரம் | 08.10.2023 | 57, 58 | |
| 8 | இராய | 08.10.2023 | 33 TO 36 | |
| 9 | மேலாநல்லூர் | 12.10.2023 | 48 | |
| 10 | வில்லியநல்லூர் | 12.10.2023 | 49 TO 52 | |
| 11 | தாழஞ்சேரி | 12.10.2023 | 53, 54 | |
| 12 | இளந்தோப்பு | 12.10.2023 | 5, 6 | |
| 13 | தலைஞாயிறு | 12.10.2023 | 42 TO 45 | |
| 14 | சேத்தூர் | 12.10.2023 | 46, 47 | |
| 15 | சித்தமல்லி | 12.10.2023 | 1, 2 | |
| 16 | குறிச்சி | 12.10.2023 | 3,4 | |
| 17 | கங்குகுடி | 12.10.2023 | 7 | |
| 18 | கடக்கம் | 14.10.2023 | 10 | |
| 19 | பட்டவர்த்தி | 14.10.2023 | 8,9 | |
| 20 | வரதம்பட்டு | 14.10.2023 | 37 TO 41 | |
| 21 | மணல்மேடு பேரூர் வார்டு 1 to 15 | 14.10.2023 | 11 to 20 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் :** மயிலாடுதுறை மேற்கு
**தலைமை:** மூவலூர். M. மூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | மகாராஜபுரம் | 11.10.2023 | 101 | 1). சங்கரநாராயணன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 2)க.அறிவுச்செல்வன் மா.விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் 3). பி.சிவதாஸ் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 4). ராஜ்குமார் மா.கலை.இலக்கிய பேரவை அமைப்பாளர் |
| 2 | மாப்படுகை | 11.10.2023 | 195 TO 199 | |
| 3 | சோழம்பேட்டை | 11.10.2023 | 200 TO 203 | |
| 4 | ஆனைமேலகரம் | 11.10.2023 | 235 TO 237 | |
| 5 | மூவலூர் | 11.10.2023 | 239, 240 | |
| 6 | சித்தர்காடு | 11.10.2023 | 241 TO 244 | |
| 7 | மறையூர் | 11.10.2023 | 245, 246 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் :** மயிலாடுதுறை கிழக்கு
**தலைமை:** P.முருகமணி, ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | மன்னம்பந்தல் | 10.10.2023 | 119 TO 123 | 1). சங்கரநாராயணன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 2) ராஜ்குமார் மா.கலை.இலக்கிய பேரவை அமைப்பாளர் 3) தீபா சத்தியேந்திரன் மா.ம.தொ.அ.அமைப்பாளர் |
| 2 | பட்டமங்கலம் | 10.10.2023 | 247 TO 252 | |
| 3 | மூரல் | 10.10.2023 | 253 TO 256 | |
| 4 | நல்லத்துக்குடி | 10.10.2023 | 255 TO 258 | |
| 5 | அகர கீரங்குடி | 10.10.2023 | 259, 260 | |
| 6 | கோடங்குடி | 10.10.2023 | 261,262 | |
| 7 | செறுதியூர் | 10.10.2023 | 263, 264 | |
| 8 | குளிச்சார் | 10.10.2023 | 265, 266 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் : சீர்காழி கிழக்கு**
**தலைமை:** பஞ்சு. குமார் , ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச் சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | காவேரிபூம்பட்டினம் | 08.10.2023 | 36 TO 44 | 1. காளி.தேசப்பன் மா.மீ.அணி அமைப்பாளர் 2. கமலஜோதி தேவேந்திரன் ஒன்றிய பெருந்தலைவர் |
| 2 | பூம்புகார் | 08.10.2023 | 45 TO 50 | |
| 3 | வாணகிரி | 08.10.2023 | 51 TO 56 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் : குத்தாலம் கிழக்கு**
**தலைமை:** மங்கை M. சங்கர், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச் சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | கொடைவிளாகம் | 09.10.2023 | 235 | |
| 2 | முத்தூர் | 09.10.2023 | 130 | 1. M.M. சித்திக் Ex.M.L.A. 2. வை.சௌமியன் மா.சு.சூ.அ.அமைப்பாளர் 3. வினோத் பாண்டியன் மா.இளைஞர் அணி து.அமைப்பாளர் 4.Dr.திருமாவளவன் மா.இளைஞர் அணி து.அமைப்பாளர் |
| 3 | கடக்கம் | 09.10.2023 | 129 | |
| 4 | கிளியனூர் | 09.10.2023 | 131 TO 135 | |
| 5 | எடக்குடி | 09.10.2023 | 228 | |
| 6 | பெரம்பூர் | 09.10.2023 | 229 TO 231 | |
| 7 | சேத்தூர் | 09.10.2023 | 232 | |
| 8 | பெருஞ்சேரி | 19.10.2023 | 137,138, 139 | |
| 9 | அரிவளூர் | 19.10.2023 | 140 TO 143 | |
| 10 | பண்டாரவாடை | 19.10.2023 | 144 | |
| 11 | வழுவூர் | 19.10.2023 | 145 TO 149 | |
| 12 | கப்பூர் | 19.10.2023 | 187,1 88 | |
| 13 | அனந்தநல்லூர் | 19.10.2023 | 191 | |
| 14 | பொரும்பூர் | 19.10.2023 | 223, 224 | |
| 15 | கழனிவாசல் | 21.10.2023 | 225 | |
| 16 | மங்கைநல்லூர் | 21.10.2023 | 189, 190 | |
| 17 | தத்தங்குடி | 21.10.2023 | 226,227 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் : குத்தாலம் வடக்கு**
**தலைமை:** கு.வைத்தியநாதன் , ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச் சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | அசிக்காடு | 10.10.2023 | 150,151 | 1. G.N.ரவி தலைமை செயற்குழு உறுப்பினர் 2.சௌமியன் மா.சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் 3.வெடி பாலமுருகன் மா.வர்த்தகர் அணி அமைப்பாளர் 4.Dr.திருமாவளவன் மா.இளைஞர் அணி து.அமைப்பாளர் |
| 2 | தேரிழந்தூர் | 10.10.2023 | 152 TO 154 | |
| 3 | தொழுதலாங்குடி | 10.10.2023 | 155, 156 | |
| 4 | மேலையூர் | 10.10.2023 | 157, 158 | |
| 5 | சென்னியநல்லூர் | 10.10.2023 | 159, 160 | |
| 6 | மேக்கிரிமங்கலம் | 10.10.2023 | 176, 177 | |
| 7 | பழைய கூடலூர் | 10.10.2023 | 178 | |
| 8 | பெருமாள்கோவில் | 10.10.2023 | 182 TO 185 | |
| 9 | மாதிரிமங்கலம் | 17.10.2023 | 161 TO 164 | |
| 10 | திருவாலங்காடு | 17.10.2023 | 165 TO 168 | |
| 11 | திருவாவடுதுறை | 17.10.2023 | 169 TO 175 | |

**தொகுதி: பூம்புகார்**
**ஒன்றியம் : செம்பனார்கோவில் மத்தி**
**தலைமை:** அமிர்த. விஜயகுமார், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. இளையராஜா, பூம்புகார் தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச் சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஆக்கூர் | 12.10.2023 | 90 TO 95 | 1) N. விஜயபாலன் Ex.M.L.A., 2)ஜெ.கபிலன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 3)S.வெற்றிவேல் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 4)S.M.சம்சுதீன் மா.சிறுபான்மை அணி அமைப்பாளர் 5) விக்னேஷ் மா.த.தொ.நு.அ.அமைப்பாளர், 6) காளி.தேசப்பன் மா.மீ.அணி அமைப்பாளர் |
| 2 | காலமநல்லூர் | 12.10.2023 | 96,97,98 | |
| 3 | இளையாளூர் | 12.10.2023 | 118 TO 123 | |
| 4 | அன்னவாசல் | 12.10.2023 | 124, 125 | |
| 5 | முக்கரும்பூர் | 12.10.2023 | 84 | |
| 6 | திருச்சம்பள்ளி | 12.10.2023 | 82,83 | |
| 7 | மாத்தூர் | 12.10.2023 | 112, 113 | |
| 8 | கிள்ளியூர் | 18.10.2023 | 239 | |
| 9 | பிள்ளைபெருமாள்நல்லூர் | 18.10.2023 | 90, 100, 101 | |
| 10 | மாணிக்கப்பங்கு | 18.10.2023 | 102, 105 | |
| 11 | T.மணல்மேடு | 18.10.2023 | 240,241 | |
| 12 | காழியப்பநல்லூர் | 18.10.2023 | 242 245 | |
| 13 | மேமாத்தூர் | 18.10.2023 | 115 TO 117 | |
| 14 | திருக்கடையூர் | 18.10.2023 | 106 TO 111 | |
| 15 | கீழ்மாத்தூர் | 18.10.2023 | 114 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் :** மயிலாடுதுறை மத்தி
**தலைமை:** ஞான. இமயநாதன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | பொன்னூர் | 09.10.2023 | 100 | 1)K.சத்தியசீலன் EX.M.L.A., 2)ஜெக. வீரபாண்டியன் EX.M.L.A., மா.வி.தொ.அ.இ.செயலாளர் 3). கண்ணகி பன்னீர்செல்வம் மா.து. செயலாளர் 4). M.K. மருது மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் 5). காந்தி தலைமை பொதுக்குழு உறுப்பினர் 6). பெரு.வீரமணி மா. ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் |
| 2 | திருமங்கலம் | 09.10.2023 | 66 67, 68 | |
| 3 | முருகமங்கலம் | 09.10.2023 | 64, 65 | |
| 4 | காளி | 09.10.2023 | 59 to 63 | |
| 5 | ஐவநல்லூர் | 09.10.2023 | 69, 70 | |
| 6 | பாண்டூர் | 09.10.2023 | 98, 99 | |
| 7 | கொற்கை | 09.10.2023 | 71, 72 | |
| 8 | அருள்மொழிதேவன் | 13.10.2023 | 96, 97 | |
| 9 | நீடூர் | 13.10.2023 | 88 to 92 | |
| 10 | கங்கனம்புத்தூர் | 13.10.2023 | 93 to 95 | |
| 11 | அருவாப்பாடி | 13.10.2023 | 73, 74 | |
| 12 | கீழமருதாந்தநல்லூர் | 13.10.2023 | 75, 76 | |
| 13 | ஆனதாண்டவபுரம் | 13.10.2023 | 77 to 80 | |
| 14 | திருவிழந்தூர் | 15.10.2023 | 102 to 108 | |
| 15 | வள்ளாலகரம் | 15.10.2023 | 109 to 115 | |
| 16 | உளுத்துக்குப்பை | 15.10.2023 | 85 to 87 | |
| 17 | மொழையூர் | 15.10.2023 | 83, 84 | |
| 18 | தர்மதானபுரம் | 15.10.2023 | 81, 82 | |
| 19 | மணக்குடி | 15.10.2023 | 116 to 118 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் :** மயிலாடுதுறை நகரம்
**தலைமை:** குண்டாமணி (எ) N.செல்வராஜ், நகர கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | வார்டு எண் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 18.10.2023 | 126, 129 | 1). ஜெக. வீரபாண்டியன் EX.M.L.A., மா.வி.தொ.அ.இ.செயலாளர் 2) அருள்செல்வன் Ex.MLA., மா.வி.அ.து.செயலாளர் 2). கண்ணகி பன்னீர்செல்வம் மா.து. செயலாளர் 3). M.K. மருது மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் 4).பி.சிவதாஸ் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 5). தீபா சத்யேந்திரன் மா.மகளிர் தொண்டரணி அமைப்பாளர் 6). Dr. பாலாஜி மா. மருத்துவர் அணி அமைப்பாளர் |
| 2 | 2 | 18.10.2023 | 127 TO 130 | |
| 3 | 3 | 18.10.2023 | 131, 132, 134 | |
| 4 | 4 | 18.10.2023 | 133, 135, 136 | |
| 5 | 5 | 18.10.2023 | 137, 138 | |
| 6 | 6 | 18.10.2023 | 147, 148 | |
| 7 | 7 | 18.10.2023 | 151 | |
| 8 | 8 | 18.10.2023 | 149, 150, 158 | |
| 9 | 9 | 18.10.2023 | 155 | |
| 10 | 10 | 19.10.2023 | 124, 159 | |
| 11 | 11 | 19.10.2023 | 162 | |
| 12 | 12 | 19.10.2023 | 154, 157 | |
| 13 | 13 | 19.10.2023 | 156, 160 | |
| 14 | 14 | 19.10.2023 | 152, 153 | |
| 15 | 15 | 19.10.2023 | 146 | |
| 16 | 16 | 19.10.2023 | 143, 144 | |
| 17 | 17 | 19.10.2023 | 191 | |
| 18 | 18 | 19.10.2023 | 140 | |
| 19 | 19 | 20.10.2023 | 139 TO 142 | |
| 20 | 20 | 20.10.2023 | 190 | |
| 21 | 21 | 20.10.2023 | 192 TO 194 | |
| 22 | 22 | 20.10.2023 | 189 | |
| 23 | 23 | 20.10.2023 | 186, 188 | |
| 24 | 24 | 20.10.2023 | 145 | |
| 25 | 25 | 20.10.2023 | 185 | |
| 26 | 26 | 20.10.2023 | 183 | |
| 27 | 27 | 20.10.2023 | 175 TO 177 | |
| 28 | 28 | 21.10.2023 | 161, 164, 167 168 | |
| 29 | 29 | 21.10.2023 | 163, 165, 166 | |
| 30 | 30 | 21.10.2023 | 170, 171 | |
| 31 | 31 | 21.10.2023 | 69, 162 | |
| 32 | 32 | 21.10.2023 | 173,174 | |
| 33 | 33 | 21.10.2023 | 178 | |
| 34 | 34 | 21.10.2023 | 181, 182 | |
| 35 | 35 | 21.10.2023 | 179, 180 | |
| 36 | 36 | 21.10.2023 | 184, 187 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** கொள்ளிடம் மேற்கு
**தலைமை:** செல்ல.சேது. ரவிக்குமார், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு.மன்னை த.சோழராஜன்சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | அளக்குடி | 11.10.2023 | 31,32,33 | 1) ஜி.என்.ரவி தலைமை செயற்குழு உறுப்பினர் 2)மகா.அலெக்சாண்டர் மா.பொருளாளர் 3)சுபா.நெடுஞ்செழியன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 4) ஜெயப்பிரகாஷ் கொள்ளிடம் ஒன்றிய குழு பெருந்தலைவர் 5) முத்து.குபேரன் மா.தொ.அணி அமைப்பாளர் |
| 2 | முதலைமேடு | 11.10.2023 | 28,29,30 | |
| 3 | மகேந்திரபள்ளி | 11.10.2023 | 34,35 | |
| 4 | காட்டூர் | 11.10.2023 | 36 | |
| 5 | புளியந்துறை | 11.10.2023 | 47, 48 | |
| 6 | பழைய பாளையம் | 11.10.2023 | 86 TO 88 | |
| 7 | தாண்டவன் குளம் | 11.10.2023 | 89 TO 93 | |
| 8 | அகரவட்டாரம் | 11.10.2023 | 94, 95 | |
| 9 | ஆரப்பள்ளம் | 11.10.2023 | 49 TO 51 | |
| 10 | புத்தூர் | 17.10.2023 | 60, 61, 62 | |
| 11 | எருக்கூர் | 17.10.2023 | 76,77,78 | |
| 12 | அரசூர் | 17.10.2023 | 97,98,99 | |
| 13 | ஓலையம்புத்தூர் | 17.10.2023 | 75 | |
| 14 | கீழ்மாத்தூர் | 17.10.2023 | 73,74 | |
| 15 | அகர எளத்தூர் | 17.10.2023 | 70, 71, 72 | |
| 16 | வடரங்கம் | 17.10.2023 | 67,68,69 | |
| 17 | மாதிரவேளூர் | 17.10.2023 | 1,2,3 | |
| 18 | குன்னம் | 17.10.2023 | 63 TO 66 | |
| 19 | ஆச்சாள்புரம் | 19.10.2023 | 52 TO 55 | |
| 20 | ஆலாலசுந்தரம் | 19.10.2023 | 82 | |
| 21 | ஆனைக்காரன்சத்திரம் | 19.10.2023 | 14 TO 27 | |
| 22 | கோபாலசமுத்திரம் | 19.10.2023 | 6 TO 13 | |
| 23 | சோதியக்குடி | 19.10.2023 | 4,5 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** சீர்காழி நகரம்
**தலைமை:** சுப்புராயன், நகர கழக செயலாளர்
**முன்னிலை:** திரு.மன்னை த.சோழராஜன் சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | வார்டு எண் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 12.10.2023 | 166 | 1). முத்து.மகேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் 2)காழி. கலை மா. பொறியாளர் அணி அமைப்பாளர் 3). சுவாமிநாதன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 4)துர்கா பரமேஸ்வரி ராஜசேகர் சீர்காழி நகர்மன்ற தலைவர் |
| 2 | 2 | 12.10.2023 | 162, 163 | |
| 3 | 3 | 12.10.2023 | 150 | |
| 4 | 4 | 12.10.2023 | 151 | |
| 5 | 5 | 12.10.2023 | 152, 153 | |
| 6 | 6 | 12.10.2023 | 156 | |
| 7 | 7 | 12.10.2023 | 154, 155 | |
| 8 | 8 | 12.10.2023 | 167 | |
| 9 | 9 | 12.10.2023 | 164, 165 | |
| 10 | 13 | 12.10.2023 | 160, 161 | |
| 11 | 15 | 12.10.2023 | 161 | |
| 12 | 14 | 18.10.2023 | 158 | |
| 13 | 10 | 18.10.2023 | 159 | |
| 14 | 11 | 18.10.2023 | 159, 168 | |
| 15 | 12 | 18.10.2023 | 169 | |
| 16 | 13 | 18.10.2023 | 170, 171 | |
| 17 | 16 | 18.10.2023 | 174, 175 | |
| 18 | 17 | 18.10.2023 | 172,173 | |
| 19 | 18 | 18.10.2023 | 177, 178 | |
| 20 | 19 | 18.10.2023 | 175, 176 | |
| 21 | 20 | 18.10.2023 | 177 | |
| 22 | 21 | 18.10.2023 | 179 TO 181 | |
| 23 | 22 | 18.10.2023 | 170 | |
| 24 | 23 | 18.10.2023 | 165 | |
| 26 | 24 | 18.10.2023 | 171 | |

**தொகுதி: மயிலாடுதுறை**
**ஒன்றியம் : குத்தாலம் வடக்கு & குத்தாலம் பேரூர்**
**தலைமை:** கு.வைத்தியநாதன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. ஜித்து (எ) ராஜரத்தினம், மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர், மாநில விவசாய அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | வானாதிராஜபுரம் | 16.10.2023 | 204 TO 206 | 1). குத்தாலம் க. அன்பழகன், EX.M.L.A., மாநில கொ.ப.து.செயலாளர் சங்கரநாராயணன் 2)S.செல்வமணி மா.து. செயலாளர் 3). காந்தி தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 2 | திருமணஞ்சேரி | 16.10.2023 | 207 TO 209 | |
| 3 | ஆலங்குடி | 16.10.2023 | 210, 211 | |
| 4 | வில்லிநல்லூர் | 16.10.2023 | 212 TO 214 | |
| 5 | சேத்திரபாலபுரம் | 16.10.2023 | 229, 231 | |
| 6 | கடலங்குடி | 16.10.2023 | 232 TO 234 | |
| 7. | குத்தாலம் பேரூர் வார்டு 1 to 15 | 16.10.2023 | 215 to 228 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** சீர்காழி மேற்கு & **வைத்தீஸ்வரன்கோயில்பேரூர்**
**தலைமை:** A.G.J.பிரபாகரன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு.மன்னை த.சோழராஜன் சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | கொண்டல் | 08.10.2023 | 134 TO 136 | 1). K.G.சீனிவாசன் மா.அவைத்தலைவர் 2)முத்து குபேரன் மா.தொண்டரணி அமைப்பாளர் 3). வின்சென்ட் தலைமை பொதுக்குழு உறுப்பினர் 4) ஆர்.எஸ்.ஸ்ரீதர் மா.அ.சா.ஓ.அ.அமைப்பாளர் |
| 2 | வள்ளுவக்குடி | 08.10.2023 | 137, 138 | |
| 3 | அத்தியூர் | 08.10.2023 | 139 | |
| 4 | அகனி | 08.10.2023 | 140 TO 143 | |
| 5 | விளந்திடசமுத்திரம் | 08.10.2023 | 144 TO 149 | |
| 6 | செம்மங்குடி | 08.10.2023 | 182, 183 | |
| 7 | தில்லைவிடங்கன் | 08.10.2023 | 184 | |
| 8 | திட்டை | 08.10.2023 | 191, 192 | |
| 9 | நெம்மேலி | 08.10.2023 | 197, 198 | |
| 10 | மருதங்குடி | 13.10.2023 | 199, 200 | |
| 11 | ஆதமங்கலம் | 20.10.2023 | 202, | |
| 12 | பெரும்ங்கலம் | 20.10.2023 | 201, 203 | |
| 13. | வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் வார்டு 1 to 15 | 16.10.2023 | 214 to 221 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** கொள்ளிடம் கிழக்கு
**தலைமை:** மலர்விழி திருமாவளவன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு.மன்னை த.சோழராஜன் சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஆர்ப்பாக்கம் | 10.10.2023 | 130 | 1). ராம.இளங்கோவன் தலைமை செயற்குழு உறுப்பினர் 2)MP.கென்னடி தலைமை பொதுக்குழு உறுப்பினர் 3). ஜுபைர் அகமத் மா.இளைஞர் அணி அமைப்பாளர் 4).ஜெயப்பிரகாஷ் கொள்ளிடம் ஒன்றிய குழு பெருந்தலைவர் 5) காளி.தேசப்பன் மா.மீ.அணி அமைப்பாளர் |
| 2 | ஒதவந்தான் குடி | 10.10.2023 | 96 | |
| 3 | கூர்த்தியம்பேட்டை | 10.10.2023 | 79,80 | |
| 4 | சியாளம் | 10.10.2023 | 58,59 | |
| 5 | பனங்குடி | 10.10.2023 | 81 | |
| 6 | நல்லவிநாயகபுரம் | 10.10.2023 | 56,57 | |
| 7 | மாதானம் | 10.10.2023 | 83,84 | |
| 8 | மகாராஜபுரம் | 10.10.2023 | 85 | |
| 9 | பச்சைபெருமாள்நல்லூர் | 10.10.2023 | 100,101 | |
| 10 | புதுப்பட்டினம் | 10.10.2023 | 38 TO 46 | |
| 11 | கொடியம்பாளையம் | 10.10.2023 | 37 | |
| 12 | உமையாள்பதி | 15.10.2023 | 128, 129 | |
| 13 | ஆலங்காடு | 15.10.2023 | 102, 103 | |
| 14 | கடவாசல் | 15.10.2023 | 131 | |
| 15 | வடகால் | 15.10.2023 | 126, 127 | |
| 16 | திருக்கருக்காவூர் | 15.10.2023 | 132,133 | |
| 17 | எடமணல் | 15.10.2023 | 123, 124, 125 | |
| 18 | வேட்டங்குடி | 15.10.2023 | 104 TO 108 | |
| 19 | திருமுல்லைவாசல் | 15.10.2023 | 109 TO 122 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** சீர்காழி கிழக்கு
**தலைமை:** பஞ்சு.குமார், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு. சோழராஜன், சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | புதுத்துறை | 13.10.2023 | 185, 186 | 1). முத்து.மகேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் 2)MP.கென்னடி தலைமை பொதுக்குழு உறுப்பினர் 3). முருகன் மா.விவசாய அணி அமைப்பாளர் 4) ஆனந்த் மா.இ.அ.து.அமைப்பாளர் |
| 2 | திருநகரி | 13.10.2023 | 187 TO 190 | |
| 3 | திருவாலி | 13.10.2023 | 228 TO 230 | |
| 4 | கீழசட்டநாதபுரம் | 13.10.2023 | 231 TO 234 | |
| 5 | நெப்பத்தூர் | 13.10.2023 | 235, 236 | |
| 6 | தென்னாம்பட்டினம் | 13.10.2023 | 237 to 241 | |
| 7 | மங்கைமடம் | 13.10.2023 | 242, 243 | |
| 8 | பெருந்தோட்டம் | 13.10.2023 | 244 to 251 | |
| 9 | திருவெண்காடு | 13.10.2023 | 252 to 260 | |
| 10 | நாங்கூர் | 13.10.2023 | 261 to 264 | |
| 11 | காத்திருப்பு | 13.10.2023 | 265, 266 | |
| 12 | செம்பதனிருப்பு | 13.10.2023 | 276 to 279 | |
| 13 | ராதாநல்லூர் | 13.10.2023 | 280 to 285 | |
| 14 | மணிகிராமம் | 13.10.2023 | 286 to 288 | |

**தொகுதி: சீர்காழி**
**ஒன்றியம் :** செம்பனார்கோவில் வடக்கு
**தலைமை:** P.M.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர்
**முன்னிலை:** திரு.மன்னை த.சோழராஜன் சீர்காழி தொகுதி பொறுப்பாளர், மாநில மாணவர் அணி இணை செயலாளர்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | தேதி | வாக்குச்சாவடி எண் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | பாகசாலை | 16.10.2023 | 267,268 | 1). K.G.சீனிவாசன் மா.அவைத்தலைவர் 2)முத்து குபேரன் மா.தொண்டரணி அமைப்பாளர் 3). வின்செண்ட் தலைமை துக்குழு உறுப்பினர் |
| 2 | கொண்டத்தூர் | 16.10.2023 | 269,270 | |
| 3 | நத்தம் | 16.10.2023 | 271,272 | |
| 4 | ஆலவேலி | 16.10.2023 | 273 | |
| 5 | சேமங்கலம் | 16.10.2023 | 274,275 | |

**குறிப்பு : மேற்கண்ட கூட்டங்களை அந்தந்த பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திடவேண்டுமென்றும் கூட்டங்களில் அந்தந்த பகுதியை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்திட வேண்டும்.**

**நிவேதா.எம்.முருகன் M.L.A.,**
பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்,
மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.10.2023) ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17–வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணியைச் சார்ந்த வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.10.2023) கத்தார் நாட்டில் 01.12.2023 முதல் 12.12.2023 வரை நடைபெறவுள்ள டி–20 காது கேளாதவர்களுக்கான உலகக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் இ. சுதர்சன் மற்றும் சாய் ஆகாஷ் ”தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் தலா ரூ.75,000/–க்கான காசோலையினை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒடிசாவில் நடந்த கால்பந்து போட்டிகளில் பதக்கம் பெற்ற

# தமிழ்நாடு மகளிர் பிரிவு அணிக்கு ரூ. 22 லட்சம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 7-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒடிசாவில் நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் மகளிர் பிரிவு கால்பந்து போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாடு அணிக்கு ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகையினை வழங்கினார். கத்தார் நாட்டில் நடைபெறவுள்ள டி-20 காது கேளாதவர்களுக்கான உலகக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் 2 வீரர்களுக்கு தலா ரூ. 75,000/-க்கான காசோலைகள் மற்றும் கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக ரூ.5 இலட்சத்திற்கான காசோலை ஆகியவற்றை “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” சார்பில் வழங்கினார்.

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை 16 மாநிலங்கள் பங்கேற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17-வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டியின் (TIER -1) இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் மணிப்பூர் மாநில அணிகள் விளையாடின. இதில் 1 : 0 என்ற கோல் கணக்கில் மணிப்பூர் அணி முதலிடம் பெற்றது. தமிழ்நாடு அணி சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு அணியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த 5 வீராங்கனைகள், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த 2 வீராங்கனைகள் இடம் பெற்றிருந்தனர். மேலும், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர் அபர்ணா, மேலாளர் அஷ்வினி ஆகியோரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணியைச் சார்ந்த 22 வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை இன்று (05.10.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

**“தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை”**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஒடிசா மாநிலத்தில் கடந்த 2023 செப்டம்பர் 25ஆம் தேதி முதல் அக்டோபர் 1ஆம் தேதி வரை நடைபெற்ற டி - 20 காது கேளாதவர்களுக்கான தேசிய கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்ட தமிழ்நாடு ஆண்கள் அணியைச் சார்ந்த 13 வீரர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இவர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும், கத்தார் நாட்டில் 2023 டிசம்பர் 1ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரை நடைபெறவுள்ள டி-20 காது கேளாதவர்களுக்கான உலகக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள உள்ள இ. சுதர்சன் மற்றும் சாய் அகாஷ் அவர்களின் ஏழ்மைநிலை கருதி “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” சார்பில் தலா ரூ. 75,000/- க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூரில் 20.10.2023 முதல் 22.10.2023 வரை நடைபெறவுள்ள தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டிக்காக “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் போட்டி நடத்தும் அமைப்பாளர்களிடம் வழங்கி, போட்டிக்கான கோப்பை, இலச்சினை மற்றும் டீ-ஷர்ட்களை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (05.10.2023) ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற டி–20 காது கேளாதவர்களுக்கான தேசிய கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்ட தமிழ்நாடு ஆண்கள் அணியைச் சார்ந்த வீரர்கள் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிக்கிம் வெள்ளம் :

# பாதிக்கப்பட்டுள்ளோருக்கு ஆதரவு வழங்கிட ஒன்றிணைவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.7 -

சிக்கிம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு ஆதரவு வழங்கிட ஒன்றிணைவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தால் துயரில் ஆழ்ந்துள்ள அனைவருக்கும் எனது இதயபூர்வமான இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போயுள்ள நமது தீரமிகு இராணுவ வீரர்கள் மற்றும் பலரது நிலையை நினைத்துக் கவலை கொள்கிறேன். பாதிக்கப்பட்டுள்ளோருக்குத் தேவையான உதவியையும் ஆதரவையும் வழங்கிட ஒன்றிணைந்திடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



# உடன்பிறப்பே... 26

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த இளம்பரிதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**



ஓவியம் : ரவி பேலட்

# இளம்பரிதி : சென்னைத் தமிழில் ஒரு கொள்கை முழக்கம்!

கழக மேடைகளில் திராவிடக் கொள்கை முழக்கத்தினைப் பேரறிஞர், கலைஞர் குரல்வழி அறிந்தவர்களுக்கு, சென்னைத் தமிழில் கழக மேடைகளைக் கட்டிப் போட்ட இளம்பரிதியை அறியத் தருகிறது இந்த உடன்பிறப்பே ...

கழகத்தின் தொடக்கக் காலங்களில் ஒரு விதி வலியுறுத்தப்பட்டது. அதாவது, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. தலைவர்கள் சென்னையில் குடியேறியபோது, அவர்கள் எல்லாம் தத்தமது சொந்த மாவட்டத்தில் இருந்துதான் பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அது சிறிது காலம் கடைப்பிடிக்கப்பட்டாலும், நாளாவட்டத்தில் அது பின்பற்றப்படவில்லை. கழகத்தின் முக்கியத் தலைவர்கள் எல்லாம் இந்த விதிக்குள் பொருந்தினர். விதிக்குள் பொருந்தாதவர்கள் சென்னைவாசிகள் என்பது. சென்னைவாசிகளுக்குக் கிடைத்த நல்வாய்ப்பு. அந்த நல்வாய்ப்பில் உதயமானவர்தான் இளம்பரிதி.

கழகம் தொடங்கிய காலங்களில் சென்னையில் எந்தப் பக்கமும் கழகக் கொடி பறக்கத் தொடங்கியது தற்செயலானது அல்ல. புதிய அரசியல் எழுச்சிக்குக் காத்திருந்த இளைஞர்களின் ஏக்கமாக, கழகத்தின் தோற்றம் இருந்தது. திராவிடர் கழகப் பின்புலத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகி இருந்தாலும், அடித்தட்டு விளிம்புநிலை மக்கள் தங்களின் கட்சியாக வரித்துக் கொண்டது தி.மு.க. வைத்தான். அப்படியாகக் கட்சியை சென்னை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் முன்னிலையில் நின்றவர்தான் இளம்பரிதி. குறிப்பாக சென்னைவாழ் பூர்வக்குடி மக்கள், விளிம்புநிலை மக்களிடம் தங்களின் கட்சியாக கழகத்தைப் பார்க்க வைத்த உழைப்பு இளம்பரிதியின் துடிப்பு.

பூர்வீகம் சென்னைதான். திருவல்லிக்கேணித் தொகுதி. இன்றைக்கு கைலாசபுரம் என்று கூறப்படும் திருவல்லிக்கேணிக்கும் மயிலாப்பூருக்கும் இடைப்பட்ட பகுதியில் பிறந்தவர். அப்பா பெயர் ஆறுமுகம். சென்னையில் கிடைத்த கல்வியும், வாழ்க்கை அனுபவங்களும் திராவிட இயக்கக் கொள்கையில் பற்று கொண்ட இளைஞராக அவரை மாற்றியது. தொடர்ச்சியாக கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் ஆரம்பக் கால முன்னணி வீரராக இருந்தார்.

## மாவட்டக் கழகமும் நடவடிக்கையும்

கழகம் தொடங்கிய காலகட்டங்களில் சென்னையில் 50 வட்டக் கழகங்களே இருந்தன. ஒரே மாவட்டக் கழகமாக இருந்தது. அந்த மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருந்தவர் இளம்பரிதி. மாவட்டச் செயலாளர் என்கிற பெரும்பொறுப்பில் இருந்தாலும் தொண்டர் என்கிற நிலையில் இருந்து கழகத்தில் களப்பணிகளில் இறங்கி வேலை செய்பவராக இருந்தவர் இளம்பரிதி.

பின்னாட்களில் ‘திராவிடச் சுடர்’ எனப் பெயர்பெற்ற இவர், தொடக்கக் காலங்களில் முரட்டுத் தொண்டர் என்றால், யாரும் நம்ப மாட்டார்கள். கழகச் செயல்பாடுகளுக்கு ஓர் இடையூறு எனில், தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களுக்கோ, அனுமதிக்கோ காத்திருக்க மாட்டார் என்பார்கள். இதனால் 1956-ஆம் ஆண்டு இறுதி முதல் 1959-ஆம் ஆண்டு இறுதி வரை மூன்று ஆண்டுக் காலத்துக்குத் தலைமைக் கழகம் இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அப்போதும் உறுப்பினராகத் தொடர்ந்தாலும், கழக மேடைகளில் ஏறக்கூடாது என்ற போது உரிமைக் குரல் கொடுத்துள்ளார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகுதான், துணை மாவட்டச் செயலாளராக இருந்த கோ.செங்குட்டுவன் சென்னை மாவட்டச் செயலாளராகப் பொறுப்பினைக் கவனிக்கத் தொடங்கினார் என ‘தி.மு.க. வரலாறு’ நூலில் குறிப்பிடுகிறார் க.திருநாவுக்கரசு.

## திருவிழாக் கூட்டம்

சென்னைத் தமிழில் இவர் ஆற்றும் உரையைக் கேட்பதற்காகவே மக்கள் திருவிழா போல கூடுவார்கள் என்று குறிப்பிடுகின்றனர் சென்னை கழகத்தினர். எத்தனை மணி நேரம் என்றாலும், ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றல் கொண்டவராக இருந்தார். அவரது நகைச்சுவை ததும்பிய பேச்சுக்கு கழகத்தினரும் சொக்குவார்கள். அப்போதெல்லாம் அரசியல் பொதுக்கூட்டங்களுக்கு நள்ளிரவு ஒரு மணி, இரண்டு மணி வரை அனுமதி உண்டு என்பதால் அவர் பேச்சைக் கேட்டுவிட்டு திருவிழாக் கூட்டம்போல மக்கள் திரும்புவார்கள் என்கின்றனர், அவர் உரையைக் கேட்டு ரசித்த கழகத்தினர்.

அவரது உரை பேரறிஞர், கலைஞர் உட்பட அனைவருக்கும் பிடித்தமானது. ஏனென்றால், சென்னைத் தமிழில் உரையாற்றும் ஆற்றல் அவருக்கு மிகப்பெரிய பலமாக இருந்தது. பின்னாட் களில் தமிழ்நாடு முழுவதும் தலைமைக் கழகச் சொற்பொழி வாளராகச் சுற்றி வந்துள்ளார்.

**செயல் வீரர்களை சென்னையில் சந்து பொந்துகளில் அழைத்துச் சென்று ஆதரவு திரட்டியதில் இளம்பரிதி புயல்போல இருந்தார்.**

சென்னை மாவட்டக் கழக மேடையில், ‘திருவாரூர் மு.கருணாநிதி உரையாற்றுவார்’ என முத்தமிழறிஞர் கலைஞரை சென்னைக்கு அழைத்து வந்து அவருக்காக திருவல்லிக்கேணிப் பகுதியில் கூட்டம் நடத்தி அறிமுகப்படுத்தி இருக்கிறார் என்கிற குறிப்புகளையும் பார்க்க முடிகிறது.

மிசா காலத்துக் கொடுமை காரணமாக, இவரது உயிராக இருந்த கழக மேடைகளில் இவரால் நின்று பேச முடியாத நிலை ஏற்பட்டது. கழக மேடைகளில் அமர்ந்தபடியே பேசுவது பழக்கமானது. அப்போதும் சைக்கிள் ரிக்‌ஷாவில் திருவொற்றியூர் முதல், செங்கல்பட்டு வரை செல்லும் பழக்கத்தை நிறுத்தியவரில்லை.

## மாநகராட்சித் தேர்தலில் புயல்

1959-ஆம் ஆண்டில், சென்னை மாநகராட்சித் தேர்தலை எதிர்கொள்ள கழகத்தின் வெற்றிக்குப் பொறுப்பாளராக இருந்தவர் தலைவர் கலைஞர். பேரறிஞர் அண்ணா எதிர்பார்த்ததற்கும் மேல் வெற்றியைப் பதிவுசெய்து, மாநகராட்சியைக் கழகத்தின் வசம் கொண்டுவந்தார் கலைஞர். அப்போது பிரச்சாரப் பணிகளில் கழகத் தலைவர்கள் குவிந்து வேலை செய்தாலும், தன்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து, எந்த வருத்தமும் இல்லாமல் கழகச் செயல் வீரர்களை சென்னையில் சந்து பொந்துகளில் அழைத்துச் சென்று ஆதரவு திரட்டியதில் இளம்பரிதி புயல்போல இருந்தார்.

தேர்தல்களில், போட்டியிட வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும், கழகத்தின் வெற்றியே அவரின் மகிழ்ச்சியாக இருந்தது. சளைக்காத அவரின் கொள்கை முழக்கத்தினை, சட்ட மேலவை உறுப்பினராக்கி அங்கு ஒலிக்க வைத்தார் கலைஞர். கழகத்தின் மீதும், கலைஞர் மீதும் கொண்டிருக்கும் பற்றும் அன்பும், அவர் ஆட்சியில் இல்லாத காலத்திலும் காட்டுவதுதான் தொண்டர்களின் நாடித் துடிப்பாக இருக்கும். இளம்பரிதியும் அந்தப் பற்றினைக் கொண்டிருந்தார்.

## இருக்கும் வரையும், இறக்கும் வரையும் கழகம்

அவரை எம்.ஜி.ஆர் பக்கம் இழுக்கவேண்டும் என எத்தனையோ அன்பர்கள் அழைப்பு விடுத்தும், அவரைத் தேடி வந்த வண்ணம் இருப்பார்களாம். சென்னையில் அவருக்கு இருந்த செல்வாக்கை மடைமாற்ற வேண்டும், கழக அணிகளுக்குள் பிளவு ஏற்படுத்த வேண்டும் என்பது அப்போது ஏற்படுத்திக் கொண்ட திட்டம். ஆனால், வந்தவர்களுக்கு தேநீர் கொடுத்து உபசரித்து, கலைஞரின் புகழைப் பாடி, இருக்கும் வரை கழகம், இறக்கும் வரை கழகம் என உறுதியாகக் கூறி வழி அனுப்பி வைத்திருக்கிறார்.

கழகப் பற்று கொண்டோரைக் கை விட்டவரில்லை கலைஞர். அதை இளம்பரிதியும் அறிவார். அவரின் இளவல் இளம்வழுதி அரசியலுக்கு வந்த காலத்தில் 1984-ஆம் ஆண்டில் வாய்ப்பு வழங்கி, சட்டமன்றத்துக்கு அனுப்பி வைத்தவர் கலைஞர். அதன் பின்னர் உடல்நலம் ஒத்துழைக்காமல் களப்பணிகளைக் குறைத்துக் கொண்ட இளம்பரிதி, 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் 10-ஆம் தேதி தனது உடலியக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

சென்னை மாநகரத்தை, கழகத்தின் கோட்டையாகக் களம் அமைத்துக் கொடுத்த அந்த முன்னணித் தொண்டரின் இறுதி ஊர்வலம் கழகக் கொடி உயர உண்மைத் தொண்டர்களுக்கு உரமூட்டும் நிகழ்வாக அமைந்தது. அந்த உழைப்பு, கழக வரலாற்றில் என்றும் எழுதப்பட்டிருக்கும்.

...துடிக்கும்

---

## ஆசியப் போட்டிகளும் உலகக் கோப்பையும்!

‘கோவிட்’ பெருந்தொற்று காரணமாகத் தள்ளிப்போன, 2022-ஆம் ஆண்டுக்கான 19-வது ஆசியப் போட்டிகள் கடந்த செப்டம்பர் 23 முதல் சீனாவின் ஹாங்ஜோ நகரில் நடைபெற்று வருகின்றன. அக்டோபர் 8-ஆம் தேதி நிறைவடையும் இந்த விளையாட்டுப் போட்டிகளில், வரலாறு காணாத அளவில் இந்தியா 80க்கும் மேற்பட்ட பதக்கங்களுடன், பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது. எப்போதும் போல தடகள விளையாட்டுக்களில்தான் நம் வீரர்கள், அதிக பதக்கங்களைக் குவித்துள்ளனர். இந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னால் வீரர்களின் ஜாதகங்களைப் பார்த்தது, மல்யூத்த வீரர்களின் கோரிக்கையைக் கண்டுகொள்ளாதது என ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுத்த குடைச்சல்கள் அனைத்தையும் தாண்டி, நம் வீரர்கள் இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

ஒரு பக்கம் இந்தியாவின் இந்தப் புதிய சாதனையை வியப்புடன் உலகம் பார்க்க, இன்னொருப் பக்கம் அக்டோபர் 5-ஆம் தேதி இந்தியாவில் தொடங்கிய உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஏளனமாகப் பார்க்கிறது. வரலாறு காணாத அளவில், படுமோசமான விளம்பரங்கள், குறைவான அளவே கூட்டம், பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களுக்கு உணவு வழங்கும் தேர்வில் குழப்பம், இந்திய வீரர்களுக்கு ‘காவி நிற ஜெர்ஸி’ எனப் பல குளறுபடிகளுடன் சொதப்பலாகத் தொடங்கியிருக்கிறது உலகக் கோப்பை!

---

## :ப்ளாஷ்பேக்



### கலைஞரின் நூல்களால் பெருமை!

1998-ஆம் ஆண்டில், **‘கலைஞரின் சாதனைக் களஞ்சியம்’** என்கிற தகவல் திரட்டை நூலாகக் கொண்டு வந்தோம். அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அளிப்பதற்காக, கோபாலபுரம் இல்லத்துக்கு என் மனைவி கௌமாரீஸ்வரியுடன் சென்றிருந்தேன். அவர் படியிலிருந்து இறங்கி வந்த நேரத்தில் நூலினைக் கொடுத்துவிட்டு, சற்றுத் தள்ளி நின்றோம். நூலினை வாங்கிப் பார்த்தவர், நான் ஓரமாக இருந்ததால் அருகில் அழைத்து விசாரித்தார். அந்த நேரத்தில் புகைப்படக் கலைஞர் யோகா எடுத்த படம் இது. அதன்பின்னர் அய்யா சின்னக்குத்தூசி அவர்களின் அறிமுகத்தின் மூலம் 2003-ஆம் ஆண்டில் தலைவரின் **‘கவிதை மழை’** நூலினை வெளியிடும் வாய்ப்பு அமைந்தது. நமது முதலமைச்சர் அவர்களின் மூலம் **‘கலைஞரின் கடிதங்கள்’** நூலினைக் கொண்டு வந்தது எங்களுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.



ராஜசேகரன்

**-கௌரா.ராஜசேகரன்,**
**சீதை பதிப்பகம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### அறிஞரும் கலைஞரும்

**1969-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர் அவரின் பிறந்த நாள் விழாவின் போது ‘தென்னாட்டு படேல்’ அறிஞர் அண்ணா என்கிற போஸ்டர்கள் சென்னை நகரம் முழுவதும் ஒட்டப் பட்டன. 1956-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டுக்குப் பின்னர் பெயருடன் அடைமொழி சேர்த்து, போஸ்டர் அடிப்பது சகஜமாக இருந்தது. அவற்றில் நீண்ட காலமாக இருந்து வந்ததும், சிறப்பு அடைமொழியாக நிலைபெற்றுவிட்டதும் அறிஞர், கலைஞர் ஆகியவை.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 262




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.